2019 - இதழ் 01

இலவசம்

## தை - 2019

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# அன்பான வாசகர்களுக்கு!

**"உள்ளான மனிதன்"** மாதாந்த சஞ்சிகையை வெளியீட்டை ஆரம்பித்து, கடந்த மாதத்துடன், **ஐந்து (5) வருடங்களை**, பூர்த்தி செய்திருக்கின்றோம். இது தேவனுடைய ஈவு!

இந்த சஞ்சிகையிலே தரப்பட்டுள்ள, புதிய நாளுக்குள் அனுதின தியானக் குறிப்புக்கள், **ஒலிப்பதிவு செய்யப்பட்டு**, எங்கள் இணைத் தளத்தில் பதிவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு அறியத் தருகின்றோம். தியானக் குறிப்புக்களின் **ஒலிப்பதிவை கேட்பதற்கு,** எங்கள் இணையத்தளத்தில், உள்ளான மனிதன், தியானப் பக்கத்தை ( INNER MAN, DAILY DEVOTION) தெரிவு செய்யுங்கள்.

உள்ளான மனிதன் சஞ்சிகை **இலங்கையிலும்** புத்தக வடிவிலே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், **அமெரிக்கா, ஐரோப்பியா, அவுஸ்ரேலியா** கண்டங்களிலுள்ள நாடுகளிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. உங்கள் உறவினர் நண்பர்கள் அதை பெற்றுக் கொள்ள விரும்பினால், அவர்களின் முகவரியை மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது இந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்திலுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவுசெய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங் கள்.

சகலமும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனின் ஜீவ வார்த்தைகளை அனுதினமும் வாசித்து தியானியுங்கள். தேவனை அறிகின்ற அறிவிலே வளருங்கள்! உங்களைக் குறித்ததான பிதாவாகிய தேவனின் சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றுங்கள்! நித்திய இன்ப வாழ்வை பரலோகில் பெற்றுக் கொள்ளுங்கள்.

**தேவன்,தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்-திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம்

2019 - இதழ் 01

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## சஞ்சிகை வெளியீடு

## 5ஆம் ஆண்டு நிறைவு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2019 - இதழ் 01**


## 5 வழிநடத்தும் தேவன்

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்று சொன்ன அன்புள்ள இயேசு, கூடவே இருந்து வழி நடத்துகிறவராயுள்ளார்.

## 7 நியமித்த ஒழுங்கின்படி...

பரலோக யாத்திரிகளாக பயணம் செய்து கொண்டிருக்கும் நாங்கள் அறியவேண்டிய காரியம் என்னவென்றால், நாங்கள் தேவன் விதித்த ஒழுங்கு நியமங்களின்படி நடக்கின்றவர்களாக இருக்கின்றோம்.

## 11 பிரசங்கக் குறிப்புகள்

தேவனை அறிந்தவர்களும், கர்த்தாவே! கர்த்தாவே என்று கூறுவதினாலே, பரலோகம் செல்ல முடியாது. மாறாக, பிதாவினுடைய சித்தத்தை தங்கள் வாழ்க்கையில் செய்பவர்கள் மாத்திரமே பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

## 13 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிறேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி

13ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... தை 1, 2, 6, 11, 15, 19, 26, 27, 28

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... தை 2, 6, 11, 12, 15, 19, 20, 26

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி**
... தை 16, 17, 27

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... தை 6, 12, 18

**ஜெபத்தின் மேன்மை**
... தை 4, 12, 29

**எங்கள் வாயின் வார்த்தைகள்**
... தை 14, 27

**நாங்கள் உலகத்தின் வெளிச்சம்**
... தை 24, 27

**தேவனுக்கு பிரியமான வாழ்க்கை**
... தை 1, 5, 7, 10, 22, 30, 31

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... தை 5, 10, 13, 15, 28

**பொறுமையோடு காத்திருங்கள்**
... தை 1, 8, 12, 15, 26

**தேவ நீதி வெளிப்படும்**
... தை 18, 28

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**
... தை 2, 31

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... தை 9, 10, 13, 17, 20, 21, 23, 25

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... தை 25, 27

# வழிநடத்தும் தேவன்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

தேவன் தாம் ஆபிரகாமுக்கு கூறிய வார்த்தையின் படியே அவனின் சந்ததியாகிய இஸ்ரவேலை தனது ஜனம் என்று கூறி, அவர்களை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி தாம் வாக்குப்பண்ணிய கானான் தேசத்துக்கு அவர்களை வழி நடத்தினார். அவர்கள் வனாந்திரத்தில் இருந்த காலமெல்லாம் தேவன் பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும் இருந்து, அவர்களுக்கு முன் சென்று நடத்தினார்.

வனாந்திரம் மனிதர் விரும்பிக் குடியிருக்க ஏற்ற இடமல்ல. அது பல சாவால்களும் பயங்களும் நிறைந்த வாழ்க்கை. உயிராபத்துக்கள் எந்த வேளையிலும் ஏற்படலாம். வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக்கொள்வது கூட நிச்சயமற்ற ஒன்றாகவே காணப்படும்.

அந்த சவால்கள் நிறைந்த வாழ்க்கையில் ஜனங்களுக்கு நிலையான நம்பிக்கையாக தேவன் இருந்தார். பகலில் மேகத்தூணையும், இரவில் அக்கினித்தூணையும் அவர்கள் பார்க்கும் போது, தேவன் தங்களுடன் இருப்பதை உணர்ந்து, பலங்கொண்டு வாழ வழிவகுத்தார்.

தேவன் அவர்களோடிருந்து அவர்களை வழிநடத்தினார். அதை மற்றவர்கள் கண்டும் கேட்டும் பயந்தார்கள்.

ஆபிரகாம் தேவனை நோக்கி, கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே என்றான்.

தேவன் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி. பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். இந்தத் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் பொருட்டு, உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே என்றார். தேவன் அதை நிறைவேற்றி முடித்தார்.

இயேசு கிறிஸ்து தம்முடையவர்களுக்காக ஜெபிக்கும் போது, பிதாவே நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதை உலகம் அறியும்படிக்கும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்று ஜெபித்தார்.

எமது வாழ்க்கையிலும் தேவன் எம்மோடிருந்து எம்மை வழி நடத்து கிறார். இயேசு தமது சீஷர்களை நோக்கி நான் உங்களை தனியே விடுவ தில்லை என்று கூறியுள்ளார். பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்து மூல மாய் எங்களைத் தமது பிள்ளைகளாக்கினவர், பரலோக ஆசீர்வாதங் களிலும் எம்மைப் பங்குள்ளவர்களாகினவர், இப்பூமியில் எம்மை அனாதையாய் விடுவதில்லை.

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிரு ங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்று சொன்ன அன்புள்ள இயேசு, தம்முடைய வார்த்தையின்படியே, எம்மோடு கூடவே இருந்து வழி நடத்துகிறவராயுள்ளார்.

என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று சொன்ன இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார்.

நானோ அவர்களுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்று சொன்ன நல்ல மேய்ப்பன் இயேசு, எமக்காக தமது ஜீவனைக் கொடுத்து எம்மைப் பாவம், சாபம், நித்திய மரணம் என்பவற்றி லிருந்து விடுதலையாக்கினார்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

இந்த புதிய வருடத்திலே தேவன் உன்னோடு கூடவே இருந்து உன்னை வழிநடத்த உன்னில் எண்ணமும் விருப்பமும் உள்ளவராய் இருக்கிறார்.

தேவனை நோக்கி தேவனே, நீரே என் தேவன். நான் உம்மையே நம்பியி ருக்கிறேன். நீரே எனது பெலனும் எனது தலையை நிமிர்த்தி உயர்த்துகி றவருமாயுள்ளீர், என்னை உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன் என்று வாழ்வை அவரிடம் கொடுத்து மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் வாழ் வாயாக. அவரே உன்னை வழி நடத்தும் தேவன்.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

## கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# நியமித்த ஒழுங்கின்படி...

இரு அணிகளுக்கிடையே, இறுதி உதைப்பந்தாட்ட போட்டி, விறுவிறுப் பாக நடந்து கொண்டிருந்தது. இரு அணிகளும் தலா ஒரு கோல் (Goal) படி போட்டிருந்தார்கள். கடைசி சில நிமிடங்களில், ஒரு அணியின், சிறந்த விளையாட்டு வீரன், இன்னுமொருமுறை பந்தை இலக்குக்குள் அடிக்க முற்பட்ட போது, எதிரணியிலுள்ள விளையாட்டு வீரன், அவனை தள்ளி விழுத்திவிட்டதால், அந்த இலக்குக்குள் பந்தை அடிக்க முடியா மற் போய்விட்டது. எதிரணியிலுள்ளவன், திட்டமிட்டே, அவனை தள்ளி விழுத்தியதை, அந்த மைதானத்திலுள்ள யாவரும் கண்டார்கள். இப் பொழுது, யாவரின் கண்களும் ஆவலுடன் நடுவரை நோக்கியது.

இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு விளையாட்டு போட்டிகளில் மட்டுமல்ல, எங்கள் நாளாந்த வாழ்க்கையிலும் முகங்கொடுக்கின்றோம். எந்த ஒரு காரியத்தையும் நெறிமுறையுடன், ஒழுங்கின்படி செய்யும் வழிமுறைகள் உண்டு. அதே நேரத்தில் அந்த வழிமுறைகளை கைக்கொள்ளாமல், உபாய தந்திரங்கள் வழியாக காரியங்களை செய்து முடிக்க எத்தனிப்ப வர்கள் பலர் உள்ளார்கள்.

ஒரு மனிதன், சாலை விதிகளுக்கமைய தன் வாகனத்தை ஓட்டிச் சென்று கொண்டிருந்தான். அவனுக்கு பின்பாக இன்னுமொரு வாகனத்தில் வந்த மனிதன், அதி வேகமாக வாகனத்தை ஓட்டி, எப்படியாவது தான் முன்னாக செல்ல வேண்டும் என்று, எத்தனித்தபோது, முன்பாக சென்று கொண்டிருந்த வாகனத்தோடு மோதிவி ட்டான். ஆனா லும் அவனோ, தன் பிழையை ஒத்துக் கொள்ளாமல், எப்படியாவது தன் குற்றத்தை மற்றய சாரதியிடம் சுமத்திவிட வேண்டும் என முயற்ச்சி செய்து கொண்டிருந்தான். மற்றய மனிதன், மிகவும் உடற்பெலன் மிக்கவனாக இருந்தபோதும், தன் சொந்த பெலத்தால், அந்த முரண்பாட்டை தீர்த்து வைக்க முடியாதிருந்தபடியால், நாட்டின் சட்டத்திற்கமைய, பொலிசார் வரும்வரை பொறுமையோடு காத்திருந்தான்.

கருப்பொருளாவது, ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் கூடும் இடத்தில் முரண்பாடுகள் ஏற்படுவது சகஜம். நாங்கள் வேலை செய்யும் இட ங்களிலும், பாடசாலைகளிலும், வெளியிடங்களிலும், சொந்த பந்தங்கள் மத்தியிலும், நண்பர்கள் மத்தியிலும், சில வேளைகளிலே சபை ஐக் கியங்களிலும் தங்கள் குற்றங்களை மறைப்பதற்காகவோ, அல்லது தாங்கள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவோ, அல்லது தாங்கள் பரிசுத்தர்கள் என்று காண்பிப்பதற்காகவோ, நெறிமுறையற்ற காரியங் களை சில மனிதர்கள் நடப்பிக்கலாம்.

எடுத்துக் காட்டாக, நாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க, ஒரு மனி தன், சாட்சிகளோடு, பழியை எங்கள் மேல் சுமத்திவிட்டான் என்று வைத் துக் கொள்வோம். பொதுவாக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் எங்களில் பெரும்பான்மையானோர் பதற்றமடைந்து, பல குழப்பங்களை எங்கள் வாழ்க்கையில் நாமோ ஏற்படுத்தி விடுவோம். வாக்குவாதங்கள், வன்மம், பகை போன்ற மாம்சத்தின் கிரியைகள் எங்கள் வாழ்வை மேற்கொண்டுவிடுகின்றது. வாழ்க்கையில் தென்றல் வீசும் போது தேவ

-னுடைய கற்பனைகளின் ஆழத்தை கற்றுக் கொள்ளுவதும், பேசுவதும் மிகவும் இலகுவானது, ஆனால், அவைகளை கைகொள்ள வேண்டிய சூழ்நிலை வரும் போது மனிதர்கள் பின்வாங்கிப் போகின்றார்கள்.

உதை பந்தாட்ட போட்டியில், அந்த எதிரணியானவன், தந்திரமாக, மற்றய அணியின் சிறந்த விளையாட்டு வீரனை தள்ளி விழுத்தியபோது, அவன் அணியை சேர்ந்த யாவரும் கோபமடைந்தார்கள். அணியின் வேறு ஒரு விளையாட்டு வீரன், உக்கிர கோபமடைந்து, தன் அணியைச் சேர்ந்த சிறந்த விளையாட்டு வீரனை தள்ளி விழுத்தியவனுடன் சண்டை செய்யுமாறு ஓடிச் சென்றான். அணியின் தலைவன், விரைந்து சென்று, அவனை தடுத்து நிறுத்தி, போட்டி இன்னும் முடியவில்லை. அவன் திட்டமிட்டே இந்த நெறிமுறையற்ற காரியத்தை செய்தான். ஆனால், இந்த போட்டியில் வெற்றி பெற, நாங்கள் பொறுமையுடன் நடுவரின் முடிவுக்கு காத்திருக்க வேண்டும் என்று அவனுக்கு அறிவுரை கூறினான். இதே போலவே, நாங்களும் வெற்றி பெறமுதலாவதாக பொறுமையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

மோசேயின் நாட்களிலே, ஜனங்களுக்கு யாதொரு காரியம் உண்டானால், வழக்கை விசாரித்து தீர்க்க, தேவகட்டளைகளையும் அவருடைய பிரமாணங்களையும் தெரிவிக்க தலைவர்களை மோசே ஏற்படுத்தியிருந்தார். அதே போலவே, எங்கள் குடும்பத்திலும், சமுகத்திலும், சபையிலும், தேசத்திலும் தலைவர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

முதலாவதாக தேவனை அறிந்த மனிதர்கள், தங்கள் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்கின்ற வழக்குகளை வேத வார்த்தைக்கு அமைய தீர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதிக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன? நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை? என்று தேவ மனிதனாகிய பவுல் அறிவுரை கூறுகின்றார்.

சில முரண்பாடுகள், குடும்பதிற்குள், சபைக்குள் உட்பட்டவைகள். ஆனால் நாட்டின் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவைகள். அவைகள் நாட்டின் சட்டங்களின்படியே தீர்த்துவைக்க வேண்டும். எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன் ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 13:1)

எங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பலவிதமான சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. அவற்றுள் நாங்கள் குற்றவாளிகளாகவோ நிரபராதிகளாகவோ இருக்கலாம். எங்களுடைய வழக்குகள், தகுந்தபடியோ, அல்லது அநீதியான முறையிலோ, தீர்த்துவைக்கப்படலாம். மனதில் பெரிய போராட்டங்கள் ஏற்படும் போது நான் அதைக் குறித்து என்ன

செய்யப் போகின்றேன். இப்படியான சில சந்தர்ப்பங்களில், வேதத்திலே காணும் சிலரின் சாட்சியை சுருக்கமாக பார்ப்போம்.

யோசேப்பு என்ற வாலிபனை, அவன் சகோதரர்கள், அடிமையாக அந்நி யருக்கு விற்றுப் போட்டார்கள். அவன் அடிமையாக அந்நிய தேசத் திலே வேலை செய்த வீட்டில், அநியாயமான பழியை அவன் மேல் சுமத்தி, அவனை சிறையில் இட்டார்கள். சிறையிலும் அவன் பொறுமை யோடு, தான் செய்யும் வேலைகளை நேர்த்தியாக செய்தான். தேவனோ அவனை குறித்த காலத்தில் நாட்டின் அதிகாரியாக உயர்த் தினார்.

தாவீது என்னும் வாலிபன், கோலியாத் என்னும் இராட்சதனான பெலி ஸ்தியனை கொன்று தன் தேசத்தை மீட்டதால், அவனுடைய ராஜா வாகிய சவுல், எரிச்சல் அடைந்து, தாவீதை கொல்லும்படி பல முயற்சி களை எடுத்தான். தாவீதோ, தேவனுடைய நேரத்திற்காக காத்திரு ந்தான். இஸ்ரவேலின் ராஜாவாக்கப்பட்டான்.

தாவீது ராஜாவாக வந்தபின்பு, அவனுடைய ராஜ்யத்தை கவிழ்கும்படி உபாய தந்திரங்களை செய்தார்கள். அந்த வேளையிலும் அவன் தேவ னுக்குள் மகிழ்ச்சியாய் இருந்தான். தான் செய்த குற்றங்களை தேவ னின் முன்னினையில் ஏற்றுக் கொண்டு மனந்திரும்புவதற்கு அவன் தய ங்கவில்லை. தேவன் தாமே மறுபடியும் அவனுடைய ராஜ்யத்தை அவ னுக்கு கொடுத்தார்.

இயேசுவோடு சுமார் மூன்றரை ஆண்டுகள் கூட இருந்து, இயேசுவை நன்றாக அறிந்த, பேதுரு என்னும் சீஷன், இயேசுவை தனக்கு தெரி யாது என்று மறுதலித்து, சாபமான வார்த்தைகளை பேசினான். தான் செய்த குற்றத்தை உணர்ந்த போது, அவனோ மனங் கசந்து அழு தான். மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த இயேசு அவனை தேடி வந்தார். அவனையே தன்னுடைய பிரதான சீஷனாக நியமித்தார்.

பாவியான ஒரு மனிதன் ஜெபம் செய்வதற்கு சென்றான், அவன் தூரத் திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணி யாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான். தேவன் அவன் பாவங்களை மன்னி த்தார். அவன் நீதிமானாக வீடு திரும்பினான்.

தன் குற்றத்துக்காக, சிலுவையில் அறையப்பட்ட கள்வன் ஒருவன், தன் குற்றத்தையும் தண்டனையையும் ஏற்றுக் கொண்டான். இன்னும் சில மணி நேரத்தில் தான் மரிக்கப் போகின்றேன் என்று அறிந்த அவன், இயேசுவை நோக்கி மன்றாடினான். மறுவாழ்வு வேண்டும் என்று வாஞ்சித்தான் அதை இயேசு அவனுக்கு கொடுத்தார்.

பிரதான ஆசாரியரும் மூப்பர் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடி னார்கள். ஒருவரும் அகப்படவில்லை. அநேகர் வந்து பொய் சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை. பாவமறியாத பரிசுத்தர் பிதாவின் சித்தம் தன்னில் நிறைவேறும்படி மௌனமாக இருந்தார். (மத்தேயு..26:59-63)

பரலோக யாத்திரிகளாக பயணம் செய்து கொண்டிருக்கும் நாங்கள் அறியவேண்டிய காரியம் என்னவென்றால், நாங்கள் தேவன் விதித்த ஒழுங்கு நியமங்களின்படி நடக்கின்றவர்களாக இருக்கின்றோம். எந்த மட்டத்திலுள்ள வழக்குகளையும் எங்கள் சொந்த பெலத்தின்படி மேற்கொள்ளுகின்றவர்கள் அல்ல. தேவன் தாமே, அதிகாரங்களை நியமிக்கும் போது, அவர்களுக்குரிய ஒழுங்கு முறையை கொடுத்திருக் கின்றார். உதாரணமாக நியாய ஆசனத்தில் இருப்பவர்கள் முகத்தாட்ச ணியம்பண்ணுவது நல்லதல்ல, கள்ளத் தராசு கர்த்தருக்கு அருவரு ப்பானது. இப்படியாக அநேக நீதி நியாயத்தின் ஒழுங்கு முறைகள் நியாய ஸ்தானத்திலே இருப்பவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

உண்மை உள்ளவர்கள் என்று கருதி, எங்களிடம் சில பொறுப்புக்களை தந்திருக்கின்றது போல, நீதியை நிலைநாட்டும்படி, குடும்பத்திலும், சமு கத்திலும், சபையிலும், தேசத்திலும், தேவன் தாமே மனிதர்களை ஏற்ப டுத்தியிருக்கின்றார். நாங்கள் பல காரியங்களில் தவறுமாற் போல, நீதியை நிலைநாட்டுகின்றவர்களும் (அதாவது, குடும்பத்தில், சமுக த்தில், சபையில், தேசத்தில்) பல காரணங்களுக்காக, அவர்களும் தவ றக் கூடிய சாத்தியங்கள் உண்டு. அதாவது, நாங்கள் குற்றம் செய்யா திருக்க, பழி எங்கள்மேல் சுமத்தப்பட்டு, சட்டப்படி நாங்கள் குற்றவா ளிகள் என்று தீர்த்து வைக்கப்படலாம். அவைகள் திட்டமிட்டு செய்யப்ப டலாம் அல்லது ஏதேட்சையாக நடைபெறலாம்.

நாங்கள் அப்படிப்பட்ட, யாதொரு இக்கட்டான சூழ்நிலையில் அகப்படும் போது, வேதத்திலுள்ள சாட்சிகள் செய்தது போல, தேவனை நோக்கி பார்க்க கற்றுக் கொள்ள வேண்டும். எங்கள் சுய நீதியில் சுய பெல த்தில் செயற்படும் போது, இன்னும் அநேக குழப்பங்களை எங்கள் வாழ்வில் நாங்களே ஏற்படுத்திவிடுவோம்.

எந்த மட்டத்திலுள்ள நியாய ஸ்தானத்திற்கு முன் நிற்க நேரிட்டாலும், இயேசு சொன்ன வார்த்தைகளை மனதில் பதிய வையுங்கள். இயேசு சொன்னார். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்க ளைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக் காகவும் ஜெபம் பண்ணுங்கள்."

ஒரு தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுகிறதையும், நியாயமும் நீதியும் புரட்டப்படுகிறதையும் நீ காண்பாயானால், அதைக்குறித்து ஆச்சரியப் படாதே. உயர்ந்தவன்மேல் உயர்ந்தவன் காவலாளியாயிருக்கிறான் அவர்கள்மேல் உயர்ந்தவரும் ஒருவருண்டு என பிரசங்கி கூறுகின்றார். ஒருநாள் யாவரும் நீதிபரராகிய இயேசுவுக்கு முன் நிற்க வேண்டும் என்ற தைரியத்தோடு பொறுமையாய் முன் செல்வோம்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களை வழிநடத்துவாராக! ஆமேன்.**

# பிதாவின் சித்தம் செய்வோம்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வசனம் : ஆதியாகமம் 11:5

விடுதலையைத் தேடி, கர்த்தருடைய சமுகத்திற்கு வந்த ஒவ்வொரு வரும் விடுதலையை பெற்றுக் கொண்டார்கள். அவருடைய முகத்தை நோக்கி பார்த்தவர்கள் யாவரும் பிரகாசம் அடைந்தார்கள், ஒருவனே னும் வெட்கப்பட்டுப் போகவில்லை.

அந்நாட்களிலே, இஸ்ரவேல் ஜனங்கள், தங்கள் வாழ்க்கையிலே நெரு க்கங்களும் துன்பங்களும் பெருகும்போது, ஒருமனப்பட்டு மிஸ்பா என் னும் இடத்தில் கூடிவருவார்கள். அந்த இடத்திலே, உபவாசத்தோடு தேவனுடைய முகத்தை நோக்கிப் பார்ப்பார்கள். தங்களை சூழ்ந்திருக் கும் எதிரிகளின் சூழ்ச்சிகளிலிருந்து எப்படி விடுதலையாவது? அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்? உம்முடைய ஓங்கும் புயத்தினாலும் பலத்த கரத்தினாலும், வியக்கத்தகு அதிசயங்களினாலும், நீர் எங்கள் முற்பிதாக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வந்தீரே! இப்போது எங்களை கட்டியிருக்கும் அடிமைத் தனத்திலிருந்து விடுத லையாக, என்ன செய்ய வேண்டும், நாங்கள் எங்கள் பொல்லாத வழி களைவிட்டு விலகுகின்றோம், நீர் எங்களுக்கு உதவி செய்யும் என்று தேவனுடைய முகத்தை நோக்கிப் பார்ப்பார்கள். இப்படியாக உண்மை யாக, அவர்கள் மனந்திரும்பிய ஒவ்வொரு வேளையும், தேவன் தாமே, அவர்களுக்கு மனம் இரங்கி, ஒரு இரட்சகனை அனுப்பி, விடுதலை யைக் கொடுத்தார். எனவே, இன்று, நாங்கள் தேவனுடைய சமுகத்தி ற்கு வரும் போது, அவரிடத்தில் எல்லாவற்றிற்கும் பதிலுண்டு என்ப தைக் குறித்து தெளிவுள்ளவர்களாக வர வேண்டும்.

ஆதியிலே, ஜனங்கள் ஒன்றுபட்டு, நமக்குப் பேர் உண்டாகும்படி ஒரு கோபுரம் கட்டுவோம் என்று ஒன்று கூடினார்கள். அந்த கோபுரமானது எங்கள் பேருக்கு ஒரு அடையாளமாக இருக்கட்டும் என்பதே அவர்க ளின் பிரதானமான நோக்கமாக இருந்தது. இன்றும் தேவனுக்கென்று சேவை செய்யும் மனிதர்களும் கூட, சில வேளைகளிலே, தங்களுக்கு பேர் உண்டாகும்படி கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். ஆனால், கர்த்த ராகிய இயேசுதாமே "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்ப டுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கும்படியா

gtachurch.ca

எங்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கின்றார். அதாவது, எங்கள் ஜெபமும் எங்கள் கிரியையும், எங்களுடைய விருப்பம் அல்ல, பரலோகத்திலிரு க்கின்ற எங்கள் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதாக இருக்க வேண் டும். எங்களுடைய கிரியைகள், எங்களுடைய பெயரை மகிமைப் படுத் தும்படி அல்ல, பிதாவாகிய தேவனுடைய நாமமே மகிமைப்படும்படியாக இருக்கவேண்டும்.

இன்று இந்த பூமியிலே மனிதர்கள், தமக்கு பேர் உண்டாகும்படிக்கு அநேக காரியங்களை செய்து வருகின்றார்கள். அப்படி செய்து வருகி ன்றவர்களில் பலர், தேவனை விசுவாசியாதவர்களும் அவருக்கு விரோ தமானவர்களுமாக எழும்பி "எங்களுக்கு பேர் உண்டாக பண்ணு வோம்" என்று தம்மை பெருமைப் படுத்துகின்றவர்களாக இருக்கின்றார கள். அதனாலேயே, இன்று, அதிகாரத்திலுள்ளவர்களும், தங்களுக்கு பேர் உண்டாக்கும்படி தேவ கற்பனைகளுக்கு விரோதமான சட்டங்களை தேசங்களிலே நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். செய்த பின்பு "அதை நான் செய்தேன்" என்று தம்மைத் தாமே பெருமையாக பேசிக் கொள்கின்றார்கள்.

இவற்றின் தார்ப்பரியம் என்ன? என் இருதயத்தில் தோன்றியிருக்கும் இந்த எண்ணம் என்னுடைய பார்வையிலே சரியாக இருக்கின்றது! எனவே நான் இதை நடத்தி முடிப்பேன் என்று துணிகரம் கொள்கின் றார்கள். இப்படிப்பட்ட எண்ணங்களை இந்த உலகபோக்கிலுள்ளவர்கள் ஆதரிக்கின்றார்கள். ஆனால், தேவனுடைய மகிமைக்கு எதிராக செய்ய ப்படும் எந்தக் காரியமும் குற்றமுள்ளதாக இருக்கின்றது. எனவே தேவ சித்தத்திற்கு விரோதமானவைகளை செய்கின்றவர்கள் அதற்குரிய விளைவை தேவன் குறித்த நேரத்தில், அவர்கள் கண்டடைவார்கள்.

தேவனை அறிந்தவர்களும், கர்த்தாவே! கர்த்தாவே என்று கூறுவதி னாலே, பரலோகம் செல்ல முடியாது. மாறாக, பிதாவினுடைய சித்த த்தை தங்கள் வாழ்க்கையில் செய்பவர்கள் மாத்திரமே பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

எனவே, எங்களுடைய பேர் அல்ல! எங்களுடைய எண்ணம் அல்ல! பிதாவாகிய தேவனுடைய நாமம் எங்கள் வாழ்வில் மகிமைப்படும்படி யாய், அவருடைய சித்தத்தையே எங்கள் வாழ்வில் நிறைவேற்றுவோம்.

**[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]**

செவ்வாய் | தை 1 | 📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 4:4 – 6

# மனநிறைவோடு முன்னேறுவோம்

"நாளை ஒரு வீடு குடிபுகுதல் விழா இருக்கின்றது, எப்படியாவது சமுகமளிக்க வேண்டும். எங்களுக்கு கடமை இருக்கின்றது, கடனும் இருக்கின்றது" என்று ஒரு மனிதன் கூறிக்கொண்டான். இந்த காலத்திலே, மனிதர்கள் பலவிதமான கொண்டாட்டங்களுக்கு அழைப்புக்களை பெற்றுக் கொள்கின்றார்கள். மனவிருப்பம் இல்லாவிட்டாலும், கடமையை முடிக்க வேண்டும் அல்லது ஊரார் என்ன நினைப்பார்கள் என்ற உந்துதலினால் அந்த அழைப்புக்களை ஏற்றுக் கொள்கின்றார்கள். கடமையுணர்வு நல்லது. ஒரு நல்ல போர் வீரன், எந்த சூழ்நிலையிலும், தன் நாட்டை காக்க வேண்டும் என்ற கடமையுணர்வு உள்ளவனாக செயலாற்றுவான். ஆனால், என்ன செய்வது, நான் போர்வீரன், "தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்", ஆகவே, இணைந்து விட்டேன், இனி என்ன செய்வது, "பல்லைக் கடித்துக் கொண்டு" கடமையை நிறைவேற்றுவோம் என்று செயல்படுபவர்களின் சேவை எப்போதும் மனச்சஞ்சலம் நிறைந்ததாக இருக்கும். மனநிறைவோடு பணி செய்வதே, மனமகிழ்ச்சியைத் தரும். நித்திய வாழ்வுக்கென்று, அழைப்பை பெற்ற நாம், இனி என்ன செய்வது, வந்து மாட்டிக் கொண்டோம், எப்படியாவது இதை நிறைவேற்ற முயற்சிப்போம் என்று கூறுவோமாக இருந்தால், அந்த வாழ்வு, நாங்கள் செய்யும் பணி, பாரம் நிறைந்ததாகவும், மனக்கசப்புடையதாகவும் இருக்கும். இப்படிப்பட்ட அர்ப்பணிப்பில், தேவன் பிரியப்படுபவர் அல்ல. நாம், என்னதான் நடந்தாலும், யார் என்ன சொன்னாலும் நான் என் தேவனுக்காக வாழ்வேன், கஷ்டங்கள் துன்பங்கள் வந்தாலும், சலிப்புடன் அல்ல, மாறாக மனமகிழ்ச்சியுடன் பெற்ற பணியை நிறைவேற்றுவேன் என்ற மனநிலையுடன் முன்னேறுவோம். இந்த மனநிலை, அது தேவனுக்கு உகந்த வாசனை. இந்த புதிய ஆண்டிலே பிரவேசித்திருக்கின்ற நாங்கள், கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவோமென்று அறிந்து, எதைச் செய்தாலும் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாக செய்வோம்.

**கொலோசெயர் 3:24**

**எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, இந்த உலகிலே பாடுகள் உண்டு, ஆனால் நீர் தரும் பெலத்தால், அவைகளை ஜெயித்து, மனநிறைவுடன் உமக்கு பணி செய்யும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

2 தீமோத்தேயு 3:12, நெகேமியா 8:10

# எங்கள் பார்வை...

பாடசாலைக்கு செல்லும் தனது பிள்ளை, செல்லும் நோக்கத்தை மறந்து, அநாவசியமற்ற, இதர காரியங்களில் தன் நாட்டத்தை செலுத்தியதால், அந்தப் பிள்ளையின் பெற்றோர், அதிருப்தியடைந் தார்கள். ஏனெனில், தங்கள் மகனின் பார்வை வேறு திசைக்கு திரும்பிய போது, அவன் பாடசாலைக்குச் செல்லும் நோக்கத்தை மற ந்து, பலவிதமாக நோவுகளை தனக் குத் தானே ஏற்படுத்திக் கொண்டான். இவ்வண்ணமாகவே எங்கள் பார்வை யும் கர்த்தர் இயேசுவை விட்டு திரு ம்பும் போது, எங்கள் பந்தயப் பொரு ளை நாங்கள் மறந்துவிடுவோம். ஒரு மனிதன் தன் வாழ்வில் ஏற்படும் பிரச் சனைகளை பெரிதுபடுத்தும் போது, அவன் சிந்தையெல்லாம் அந்தப் பிரச் சனையிலேயே இருக்கும். அந்த வேளையிலே, இயேசுவின் சாயலாக மாற வேண்டும் என்ற எண்ணத்தை மறந்து போய்விடுவான். வேறு சிலர், தங்கள் பார்வையை மற்றவர்கள் மேல் வைத்துவிடுகின்றார்கள். மற்றவர்களின் வாழ்க்கையில் குறையை காண்பதிலோ அல்லது மற்றவர்கள் நீதி யாய் நடக்கவேண்டும் என்று அவர்களின் வாழ்க்கையின் மேல் நோக் கமாக இருக்கும் போது, அவர்கள், தங்கள் நோக்கத்தை மறந்து விடுகின்றார்கள். நாங்கள் வீட்டிலிருந்தாலும், வெளியிலிருந்தாலும், ஆலயத்திலிருந்தாலும், வேலையிலிருந்தாலும், எங்கள் பார்வை எங் கள் பரமன் இயேசுவின் மேல் இருக்க வேண்டும். அதாவது, அவ ரைப் போல, பிதாவாகிய தேவனின் சித்தத்தை செய்ய வேண்டும். எங்கள் மனக் கண்களை குருடுபடுத்தி, பார்வையை வேறு காரியங் களில் திருப்பி விடுவதே எங்கள் எதிரியாகிய பிசாசானவனின் நோக் கம். தேவன் எங்கள் வாழ்வில் ஒரு அழகான திட்டத்தை வைத்திரு க்கும் போது, அந்த திட்டத்திலிருந்து எங்கள் பார்வையை நாங்கள் விலக்கினால், வேண்டப்படாத விபரீதங்களை எங்கள் வாழ்க்கையில் நாங்கள் ஏற்படுத்திக் கொள்வோம். எனவே, இந்த ஆண்டில் இன்னும் அதிகமாக தேவனைக் கிட்டிச் சேருவோம். எங்கள் பார்வை தேவன் காட்டும் வழியிலிருப்பதாக.

**எபிரெயர் 3:1**

இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, என்னுடைய பார்வை சிந்தையெல்லாம், உம்முடைய கற்பனைகளின் வழியிலே இருக்கும்படிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இளைப்பாறுதல் தருகின்றவர்...

இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, தம்மிடத்தில் விடுதலையடையும்படியாய் வந்த யாவரையும் குணமாக்கி அவர்கள் வாழ்வில் ஒரு விடியலை உண்டு பண்ணினார். சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் போன்றவர்களை மாத்திரமல்ல, வாழ்க்கையில் சிறு மைப்பட்டு ஒடுக்கப்பட்டு மனநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆறுதல் கொடுத்தார். வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே நீங்கள் எல்லோரும் என்னண்டை வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன என்னும் ஜீவ வார்த்தை அன்று மட்டுமல்ல, இன்றும் மாறாததாக இருக்கின்றது. இன்றும் நாங்கள் இயேசு அண்டைக்கு வரும் போது, அவர்தாமே, இந்த உலகம் தரமுடியாத சமாதானத்தை உள்ளத்திலே கொடுத்து, மன ஆறுதலை தருகின்றவராய் இருக்கின்றார். “இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்” என்ற வசனத்தின்படி, பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்திலே இருந்து எங்களுக்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கும் இயேசு எங்கள் உள்ளத்தில் வாசம் செய்ய விரும்புகின்றார். அவர் வாசம் செய்யும் உள்ளத்தில் குழப்பங்களுக்கு இடமில்லை. எனவே, அவர் உங்கள் உள்ளத்தில் வாசம் செய்யும்படி அவருக்கு இடங்கொடுங்கள். அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். அவருடைய வார்த்தைகளை வாசித்து, இருதயத்திலே பதியவைத்து, தியானித்து கைகொண்டு வருகின்றவர்கள், அவருக்கு இடங்கொடுக்கின்றார்கள். அவரோடு தினமும் ஜெபத்திலே இடைப்படுகின்றவர்கள், அவர் தங்கள் உள்ளத்திலே வாசம் செய்கின்றார் என்பதை உணர்ந்து கொள்ளுகின்றார்கள். பிரியமானவர்களே, தேவனுடைய ஜீவவார்த்தைகளை தினமும் வாசியுங்கள், தியானியுங்கள், கைக்கொள்ளுங்கள். நாள்தோறும் ஜெபத்திலே அவருடன் இடைப்படுங்கள், அதன் வழியாக இயேசு அண்டை சேருங்கள், அவர் உங்களுக்கு இளைப்பாறுதலை தருவார்.

**மத்தேயு 11:28**

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

**ஜெபம்**: ஆறுதலின் தேவனே, உம்மிடத்திலிருக்கும் இளைப்பாறுதலின் மேன்மையை நான் உணர்ந்து கொள்ளவும், உம்மண்டை கிட்டிச் சேரவும் எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெபம் எங்கள் பாக்கியம்

ஜெபம் செய்யுங்கள் என்று கூறியவுடன், பொதுவாக மனிதர்கள் மன திலே, விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் தேவனிடம் சமர்ப் பிப்பதையே கருத்தில் கொள்கின்றார்கள். விண்ணப்பங்களும் வேண் டுதல்களும் ஜெபத்தின் ஒருபகுதி. அரச சபையிலே, குற்றவாளியின் கூண்டில் இரந்து நிற்கும் ஏழைக் குடியானவனைப் போல, தேவனு டைய சமுகத்தில் பலர் தங்களை வருத்திக் கொள்கின்றார்கள். ஜெபம் என்று சொன்னால், இத்தனை படிகள் உண்டு, இன்ன பிரகாரமான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும், பல முன் ஏற்பாடுகளை செய்ய வேண் டும், பல பரிகாரங்களையும், பல நற் கிரியைகளையும் செய்து, அவைகளை ஒரு பொதியில் கட்டி, தேவனிடத்தி ற்கு செல்ல வேண்டும் என்று ஜெப த்தை ஒரு சிரமமான செயற்திட்டம் போல பலர் ஏற்படுத்திக் கொள்கின்றா ர்கள். அப்படியாக பெரும் நற்கிரியைகள் நிறைந்த பொதியுடன் பரிசேயன் ஒருவன் ஜெபிக்கச் சென்றான். தான் செய்த நற்கிரியை களை தேவ சமுகத்திலே தெரியப்படுத்தினான், பாவியான மனிதர் களை போல, தான் வாழவில்லை என்று பெருமிதமடைந்தான். ஆனால் அவன் தேவ சமுகத்திலிருந்து நீதிமானாக வீடு திரும்பவில்லை. அவ னுடைய ஜெபத்தை தேவன் கேட்கவில்லை. ஜெபத்தின் வழியாக நாங்கள் தேவனோடு இடைப்படுகின்றோம். ஜெப வேளையிலே, தேவனை துதித்து, பாடி, நன்றி செலுத்தி, மற்றவர்களுக்காக பரிந்து பேசி, விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் தேவனுக்கு தெரி யப்படுத்துகின்றோம். தேவ சமுகத்திற்கு பயபக்தியுடன் செல்ல வேண்டும் என்பது உண்மை. ஆனால் எங்கள் நற்கிரியைகளின் பொதி களால் தேவனை கவர்ந்து கொள்ளலாம் என்று எண்ணிவிடக்கூடாது. தாழ்மையுள்ள இருதயத்தோடு தேவ சமுகத்திற்கு செல்ல வேண்டும். அவருடைய சமுகத்திலே உண்மையை மனதார பேச வேண்டும். தேவனுடைய சமுகத்திற்கு செல்வது ஒரு கடினமான செயற்திட்டம் அல்ல. ஜெபம் என்பது எங்கள் தேவனுடைய ஈவு. எங்களைப் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனிடம் சேரும் ஆனந்த பாக்கியம்.

**1 சாமுவேல் 16:7**

மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன் மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்.

**ஜெபம்**: அன்புள்ள பிதாவே, உம்முடன் இடைப்படும் படியாக நீர் ஏற்படுத்தியுள்ள இந்த ஆனந்த பாக்கியத்திற்காக உமக்கு நன்றி. அந்த பாக்கியத்தை உணர்ந்து கொள்ளும் இதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எனது பெயர்...

ஒரு கிராமத்தில் வாழ்ந்த மனிதன், கிராமத்தில் ஒரு மணிகூட்டு கோபுரம் கட்ட வேண்டும், அதனால் ஜனங்கள் பயனடைய வேண்டும். என் நாட்கள் முடிந்து, நான் இவ்வுலகத்தைவிட்டு கடந்து சென்று போன பின்பும், என்னுடைய பெயரை, கிராமத்தின் அடுத்த சந்ததியினரும் நினைவுகூர வேண்டும் என்று பிரயாசப்பட்டான். இந்த மனிதனுடைய பிரயாசத்தில் நன்மை உண்டு. எனினும் தன்னுடைய பெயர் கிராம மக்களின் மத்தியில், என்றும் ஒரு நினைவுச் சின்னமாக இருக்க வேண்டும் என்று விரும்பினான். இப்படியாக இந்த உலகிலே மனிதர்கள் தங்கள் பெயர்களை பல பிரபல்யமான இடங்களிலே பொறிப்பதற்காக அரும்பாடு படுகின்றார்கள். சில மக்களின் நன்மைக்கு ஏதுவானவைகளும், வேறு சில தேவனுடைய பிரமாணங்களுக்கு விரோதமானவைகளுமாக இருக்கின்றது. எங்களுடைய வாழ்க்கையிலும் எங்கள் முன்னோர் செய்த நன்மைகளையும், வீரதீர செயல்கள் மற்றும் சாதனைகளையும் பெருமிதமாக பேசிக் கொள்வோம். அவ்வாறாக, எங்களுடைய பெயரும் பிரபல்யமான மனிதர்களின் பட்டியலில் பொறிக்கப்பட்டால் அதைக் குறித்து மிகவும் சந்தோஷமடைவோம். இந்த பூமியிலே நற்கிரியைகளை நடப்பிப்பது நல்லது. எங்கள் பெயர்கள் உலகத்திலே முக்கியமான இடங்களில் பொறிக்கப்படுவதில் தவறில்லை. ஆனால், பூமியிலே அதி மேன்மையான இடத்திலே எங்கள் பெயர் எழுதப்பட்டு, தேவனுடைய "ஜீவ புத்தகத்தலே" எங்கள் பெயர் இடம் பெறாவிட்டால், அதனால் என்ன பயன்? எனவே எங்கள் பெயர் தேவனுடைய "ஜீவ புத்தகத்தில்" எழுதப்பட்டிருக்கும்படியாய், இந்த பூமியிலே வாழும் நாட்களில், எங்கள் கிரியைகளை கண்டு மற்றவர்கள் பிதாவாகிய தேவனுடைய பெயர் மகிமைப்படும்படியான கிரியைகளை நாங்கள் நடப்பிக்க வேண்டும். அவை அன்னதானங்களும், பண உதவிகளும் மட்டுமல்ல. பிறரை நேசியுங்கள். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

**லூக்கா 10:20**

**உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகிலே என்னுடைய பெயர் ஒரு பொருட்டாக எண்ணப்படாவிடினும், உமது ஜீவ புத்தகத்திலே என்னுடைய பெயர் இடம் பெறும்படியாக உம்முடைய சித்தம் செய்ய என்னை நடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கண்ணோக்கி பார்க்கும் தேவன்

ஒரு நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பல ஜனங்கள், தங்கள் சொந்த இடத்தைவிட்டு இடம்பெயர்ந்து போகும்படியான நிலைக்கு நிர்பந்திக்கப்பட்டார்கள். வேறு ஊருக்கு செல்வதற்கு அனுமதி எடுப்பது மிகவும் கடினமான காலமாக இருந்தது. செல்வந்தர்களும் செல்வாக்கு உள்ளவர்களும், அனுமதிப் பத்திரங்கள் எடுக்கும் நிலையங்களிலே, தங்களுக்கு அறிமுகமான அதிகாரிகளின் பெயர்களை சொன்னவுடனே, அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் யாவும் வழங்கப்பட்டு, பாதுகாப்பாக அவர்கள் செல்லவிருந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஆனால் ஏழைக் குடியானவனான மனிதன் என்னசெய்வான்? நாளாந்த உழைப்பு இல்லை எனவே அவனிடம் பணம் இல்லை. செல்வதற்கு இடம் இல்லை. உலகத்திலே செல்வாக்குகள் எதுவும் இல்லை. அவன் உன்னதத்திலே வாசம் செய்யும் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணும்போது, திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணா மல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார். கர்த்தர் கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்கவும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலையாக்கவும், தம்முடைய உயர்ந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பார்த்து, வானங்களிலிருந்து பூமியின்மேல் கண்ணோக்கமாயிருக்கிறார். ஆம் பிரியமானவர்களே, இந்த உலகில் உள்ள எல்லா அதிகாரங்களும், துரைத்தனங்களுக்கும், நீதிமன்றங்களுக்கும் மேலான, நிகரில்லா உன்னதமான தேவன் பரலோகத்திலே இருக்கின்றார். அவர் உன்னதங்களிலே வாசம் செய்தாலும், சிறுமைப்பட்டவர்கள் மேல் கண்ணோக்கமாயுள்ளார். இந்த உலகிலே மனிதர்களின் உதவியை நாடுவதில் தவறு இல்லை. தேவன் மனித தயவுகளையும் ஏற்படுத்திக் கொடுகின்றவராயிருக்கின்றார். ஆனால் மனிதர்கள் மட்டுப்படுத்தப்பட்டவர்களும், அவர்கள் மனம் மாறிப் போகின்றவர்களும், அவர்களின் வாழ்க்கை புல்லின் பூவுக்கு ஒத்திருக்கின்றதென்பதையும் மறந்து போய்விடாதிருங்கள். இந்த உலகில் எந்த செல்வாக்கும் இல்லை என்று கவலைப்படாதிருங்கள். உன்னதமானவர் வானங்களிலிருந்து பூமியின் மேல் கண்ணோக்கமாயுள்ளார்.

**சங்கீதம் 102:20**

தம்முடைய உயர்ந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பார்த்து, வானங்களிலிருந்து பூமியின் மேல் கண்ணோக்கமானார்.

**ஜெபம்:** நிகரில்லாத தேவனே, இந்த உலகத்தின் செல்வத்தையோ அல்லது செல்வாக்கையோ பற்றிக் கொள்ளாமல், எப்போதும் எவ்வேளையும் உம்மை நோக்கி பார்க்கும் உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பொறுமையாக இருங்கள்

என் அயலில் வாழும் மனிதன் இன்ன பிரகாரமாக என்னைக் குறித்து அவதூறு பேசினான் என்று ஒரு மனிதன் அறிந்து கொண்டபோது, மனம் கலங்கி, அதை நியாயப்படுத்த பல கிரியைகளை நடப்பித்து, தன் மனதை இன்னும் புண்படுத்தி, தன் காலத்தை விரயப்படுத்தினான். இந்த உலகிலே, பசியினால் ஆகாரம் இல்லை என்று துயருரும் ஒருசாராரும், சிகை அலங்காரம் செய்ய பூக்கள் வேண்ட வேண்டுமே என்று வருந்தும் இன்னுமொரு சாராரும் ஒரே தேசத்தில் வாழ்கின்றார்கள். உண்டு, குடித்து, நன்றாக உடுத்தி, மாளிகையிலே வாழ்பவர்கள், வாழ்க் கையில் பரவசத்தை நாடுகின்றார்கள். அற்பமான காரியங்களை கூட, பெரி துபடுத்தி, அவற்றை உலகச் செய்திகளாக மாற்றிவிடுகின்றார்கள். ஏனெனில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை எப்படி பிரயோஜனப்படு த்துவது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளாததினால், அநாவசியமான காரியங்களில், தங்கள் காலத்தை விரயப்படுத்துகின்றார்கள். தேவனுக்கு பயந்து, அவர் கற்பனைகளின் வழிகளிலே நிதானமாக வாழும் மனிதன், மற்றவர்கள் பேசும் சாரமற்ற வார்த்தைகளுக்கு செவி கொடுக்கமாட்டான். அயலவர்களோ, அல்லது நாங்கள் நெருங்கிப் பழகுகின்றவர்களோ, பேசும் எல்லா விடயங்களையும், உள்வாங்கி, அதை பெரும் சம்பவங்களாக மாற்றிவிடக் கூடாது. சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே. கவனித்தால் உன் வேலைக்காரன் உன்னை நிந்திப்பதைக் கேள்விப்பட வேண்டியதாகும். அதுமட்டுமல்ல, தேவனை அறியாத நாட்களிலும், தேவனை அறிந்த பின்பும் நாங்களும் மற்றவர்களை பற்றி அறிந்தோ அறியாமலோ பேசிய சந்தர்ப்பங்களை நினைத்துப் பாருங்கள். அந்நாட்களில் பரலோகத்திலுள்ள தேவனும், இன்னும் பல மனிதர்களும் தங்கள் பொறுமையை காத்துக் கொண்டார்கள். ஒரு பாவமும் செய்யாமல், நன்மையையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை. எனவே, தேவனுடைய புத்திரர்கள் என்னும் பதவியைப் பெற்ற நாம், அநாவசியமான பேச்சுக்களை ஒரு பொருட்டாக எண்ணி, அதை பெரும் நாடகமாக மாற்றாமல், தேவனுடைய பாதத்தில் அவற்றை ஒப்புக் கொடுத்து, காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்வோம்.

**பிரசங்கி 7:22**

அநேகந்தரம் நீயும் பிறரை நிந்தித்தாயென்று, உன்மனதுக்கு தெரியுமே.

**ஜெபம்**: நீடிய சாந்தமுள்ள தேவனே, மற்றவர்கள் பேசும் அநாவசியமான எல்லா காரியங்களையும் கவனித்து, என் மனதை நானே இன்னும் வேதனைப்படுத்தாமல், பொறுமையை காத்துக் கொள்ள கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | தை 8

📖 மாலை வாசகம் – அப்போஸ் 16:31

# தேவனுக்கு பிரியமானவர்கள்

மாலை வேளையிலே, இன்னும் சில நிமிடங்களில் ஆரம்பிக்கவிருக்கும், பரிசளிப்பு விழாவிற்கு வருவேன் என்ற தந்தையாரை இன்னும் காணவில்லை. வேலை செய்யும் இடத்தில், அவருடைய மேற்பார்வையாளர், இன்னும் அதிக வேலைகள் செய்யும் படி பணித்துவிட்டார் போல தோன்றுகின்றது. அதனால் உன் அப்பாவிற்கு இன்று வரக் கிடைக்குமோ தெரியாது என தன் சின்ன மகனிடம் அவனது தாய் கூறினார். அவனோ, "என்னை பார்ப்பதற்காக, என்னுடைய அப்பா எப்படியும் வருவார்" என்று உறுதியாயிருந்தான். சற்று தாமதித்தாலும், குறித்த நேரத்தில், தந்தையார் அங்கே சமுகமளித்தார். மனிதர்கள் தாங்கள் கூறும் உறுதிமொழிகளை, விரும்பினாலும் நிறைவேற்றமுடியாத சந்தர்ப்பங்கள் உண்டாகி விடுவதுண்டு. அப்படியிருந்தும், அந்த சின்னப் பையனின் விசுவாசத்தை கவனித்துப் பாருங்கள். எங்களுடைய பரம தந்தை வாக்கு மாறாதவர். அவர் சொன்னதை செய்து முடிக்கின்றவர். எங்களுக்கென முன் குறித்தவைகளை எப்படியும் நிறைவேற்றி முடிக்கின்றவர். எனவே நாங்கள் இன்னும் அதிக விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். விசுவாசம் இல்லாமல் எந்த ஒரு மனிதனும் தேவனுடைய காரியங்களை சரியான முறையில் அறிந்து கொள்ள முடியாது, வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழவும் முடியாது. சில வேளைகளிலே, பெலவீனமான நேரங்களில், சந்தேகங்கள் மனதில் தோன்றும் போது, தேவனுடைய பாதத்தில் தயவோடு உங்கள் விண்ணப்பங்களை ஏறெடுங்கள். உங்கள் பெலவீனங்களை தெரியப்படுத்துங்கள். ஆனால் விசுவாசத்திற்கெதிரான வார்த்தைகளை உங்கள் வாயினால் அறிக்கையிடாதிருங்கள். அன்புள்ள தேவன் எங்கள் நிலையை நன்றாக அறிந்திருக்கின்றார். பரலோகத்திலிருந்து நல்ல ஈவுகளை கொடுக்க தயை பெருத்தவராயிருக்கின்றார்.

**எபிரெயர் 11:6**

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, நீர் சொன்னதை செய்து முடிக்கின்றவர் என்ற வார்த்தையை அறிந்திருக்கின்ற நாங்கள் நீர் சொன்னவைகளை விசுவாசித்து, அவை நிறைவேறக்காத்திருக்கும் பொறுமையைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கேட்டு கற்றுக் கொள்ளுங்கள்

ஒரு வைத்திய சாலையிலுள்ள அதி நவீன உபகரணத்தை இயக்கும் மருத்துவ ஆய்வுகூட உதவியாளர், அந்த இயந்திரம் இயங்கும் முறையைக் குறித்து விமர்சித்தார். அந்த இயந்திரத்தை உருவாக்கிய பொறியியலாளர், அவ்விடத்திற்கு வந்த போது, அந்த மருத்துவ உதவியாளர், இந்த இயந்திரம் சரியான முறையில் அமைக்கப்படவில்லை என்று தீர்க்கமான முடிவை கூறினார். அந்த பொறியியளாலரோ, தயவுடன், ஐயா, இந்த இயந்திரத்தை வடிவமைத்து, அதை உருவாக்கி, சோதனை செய்து வெளியிடுவற்கு சில ஆண்டுகள் எடுத்தது. அநேக மருத்துவ உயிரியல் பொறியியளாலர்கள் ஒன்று சேர்ந்து, இதை வடிவமைத்தார்கள். காரியம் அப்படியாக இருக்கும் போது, ஒரு சில நாட்கள் இந்த உபகரணத்தை உபயோகம் செய்த உங்களுக்கு எப்படி இதன் அமைப்பை அறிந்து கொள்ள முடியும்? ஒரு காரியத்தை குறித்து அறிவுவேண்டும் என்றால், அதை அறிந்தவர்களிடம் கேட்டு கற்பது நல்லது அல்லது எனக்கு இந்த காரியம் தெரியாது என்று கூறுவது ஏற்புடையது என கூறினார். பிரியமானவர்களே, எங்கள் வாழ்நாட்கள் இந்த பூமியில் குறுகியது. எங்கள் அறிவு மட்டுப்படுத்தப்பட்டது. எனவே, தெய்வீகத்திற்குரிய காரியங்கள், படைப்புக்கள், மனிதனுடைய வாழ்க்கை இவற்றை பற்றி மனத் தாழ்மையோடு கற்றுக் கொள்ளும் மனப்பான்மை தேவை. “தேவன் கூறிய வார்த்தைகள் எனக்கு விளங்கவில்லை எனவே, இது உண்மையல்ல அல்லது இது பிழை” என்று கூறாமல், இந்த காரியம் எனக்கு விளங்கவில்லை என தாழ்மையுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். தேவனிடம் ஞானத்தை கேளுங்கள், அவர் அதை உங்களுக்கு அருளிச் செய்வார். உங்கள் அறிவுக்கும், ஆய்வுக்கும், ஆண்டுக்கும் அப்பாற்பட்டவைகளைக் குறித்து விமர்சிக்காமல், பரலோகத்திலே வீற்றிருக்கின்ற உன்னதமானவரை நோக்கிப் பாருங்கள்.

**யாக்கோபு 1:5**

**உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.**

**ஜெபம்:** சகலமும் படைத்த தேவனே, வேதத்திலுள்ள திவ்விய இரகசியங்களை அறிந்து கொள்ளத் தக்கதான ஞானத்தை தந்து என்னை வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வியாழன் | தை 10

📖 மாலை வாசகம் – சங்கீதம் 119:34

# திருவசனத்தை கைக்கொள்வோம்

பட்டணத்திற்கு தொலைவிலே இருந்த கிராமம் ஒன்றில், ஒரு மனிதன் பெரும் பண்ணை ஒன்றை நடத்தி வந்தான். அந்த கிராமத்திற்கு அருகில் ஒரு காடு இருந்ததால், பொல்லாத வனவிலங்குகளால் வரும் மோசம் பெரிதாக இருந்தது. பண்ணையிலுள்ள ஆடு மாடுகளுக்கு மட்டுமல்ல, அங்கு வாழும் அவன் குடும்பத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. மற்றய பண்ணை உரிமையாளர்கள் போல, அவனும் ஒரு வேட்டைத் துப்பாக்கியை கொள்வனவு செய்து வைத்திருந்தான். அதின் குழாய்களை துப்பரவாக்கி, அதை நன்றாக பராமரித்து வந்தான். ஆனாலும், பொல்லாத வனவிலங்குகள், பண்ணையை தாக்கும் போது, அவன் உணர்ச்சிவசம் அடைந்து, என்ன செய்வதென்பது என்று தெரியாமல், அங்குமிங்குமாக ஓடி, சத்தமிட்டு குழப்பமடைந்தான். இவன் இப்படியாக சத்தமிட்டு குழப்பம் அடையும் நேரத்தில், அந்த பொல்லாத வனவிலங்குகள், ஆடு மாடுகளை ஒவ்வொன்றாக கொன்று, இழுத்துச் சென்று விடும். இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள்! பண்ணையில் வேட்டைத் துப்பாக்கியை வைத்து, சுத்தம் செய்து, நன்றாக பராமரிப்பதால், அவனுக்கு என்ன பலன்? ஒன்றுமில்லை! அதுபோல தேவனுடைய திரு வசனங்களை, வாசித்து, கற்று, கேட்டு, தேறினவன், அதை தன் அன்றாட வாழ்வில் உபயோகிக்காமல் இருந்தால் என்ன பலன்? வேத வார்த்தைகள் எங்கே எப்படி கூறப்பட்டிருக்கின்றது என எங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால், நாளாந்த வாழ்க்கையிலே சவால்கள் எங்களை எதிர்நோக்கி வரும் போது, திரு வசனத்தை மறந்து, மாம்சத்திலே செயல்ப்படுவோமாக இருந்தால் நாங்களும், பயங்கரமான வன விலங்குகள் தன் வீட்டை நாசம்பண்ணும்போது, கொடுக்கப்பட்ட வேட்டைத் துப்பாக்கியை பாவியாதிருந்த மனிதனுக்கு ஒப்பாக இருப்போம். தேவனுடைய திருவசனத்திலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்

**யாக்கோபு 1:22**

**அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.**

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, உம்முடைய வசனங்களை ஆர்வமாக படிக்கும் ஆர்வத்தையும், கற்றவைகளை கைக்கொள்ளவும் உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | தை 11

📖 மாலை வாசகம் - 1 தெச 5:17-18

# சோர்வான நேரங்களிலே...

இன்றைக்கு மனம் சரியில்லை. மனக் குழப்பத்தோடு, அரைகுறையாக ஜெபிப்பதால் பிரயோஜனம் இல்லை, எனவே இன்று கொஞ்ச நேரம், தொலைக் காட்சியில் நாடகத்தைப் பார்ப்போம் என்று ஒரு தாயார் சொல்லிக் கொண்டார். இந்த கூற்றை கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கின்றது. ஆனால் இப்படியான சூழ்நிலைகளிலே இன்னும் அதிகமாக தேவ சமுகத்தை கிட்டிச் சேரவேண்டும். திருவசனத்தை கேட்கிறவர்களாக மட்டுமல்ல, அதன் படி செய்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும் என நேற்றய தினத்திலே தியானித்தோம். அதன்படியே, எங்கள் குழப்பங்களுக்கான தீர்வுகளையும் மன ச்சமானதானத்தையும் இயேசு எங்களு க்கு தருகின்றவராயிருக்கின்றார். குத் துச் சண்டை செய்து கொண்டிருக்கும் ஒரு மனிதனுக்கு முகத்தில் இரண்டு அடிகள் விழுந்துவிட்டால், இனி என்ன, இரண்டு அடி விழுந்து விட்டது, அப்படியே விட்டுவிடுவோம் என்று எதிரிக்கு விட்டுக் கொடுப்பானாக இருந்தால், எதிரியானவன், அந்த மனிதன் நினைவிழந்து விழுந்து போகுமட்டும் குத்துக்களை முகத்தில் வீசிக் கொண்டிருப்பான். எனவே, வாழ்வில் வரும் சில பின்னடைவுகளை கண்டு, மனதும் மாசம்சமும் விரும்பினதை செய்ய இடங்கொடுக்காமல், உயிர் வாழும் வரை, நல்ல போர்ச் சேவகனைப் போல போராட வேண்டும். இக்கட்டான சூழ்நிலைகளில், திருவசனம் கூறுவதைப் போல, நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லா வற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்ப டுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதா னம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். அரைகுறையான மனதை தேவன்தாமே பூரணப்படுத்துவார். உங்கள் வாழ்க்கையில் வரும் இன்ப துன்ப நாட்களிலே, உங்கள் உணர்வுகள் மாற்றடைவதால், பிசா சானவன், உங்களை வஞ்சிக்க எத்தனம் செய்வான். பெலவீனமான நேரங்களில், உங்கள் ஆசை இச்சைகளில் மாண்டு போகவேண்டும் என்பதே எதிரியின் நோக்கம். எனவே எதிரியாகிய பிசாசானவ னுக்கு மனதிலே இடங் கொடுக்காதபடி விழிப்புள்ளவர்களாக இருங்கள்.

**மத்தேயு 26:41**

**நீங்கள் சோதனைக்குட்ப டாதபடிக்கு விழித்திரு ந்து ஜெபம்பண்ணுங்கள்**

**ஜெபம்:** பரலோக பிதாவே, என்னுடைய மனநிலைகள் மாறும் போது, ஆசை இச்சைகளுக்கு இடங்கொடுத்து, மேலும் சோர்ந்து போகாதபடிக்கு, விழிப்புள்ளவனா(ளா)க வாழ எனக்கு உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | தை 12

📖 மாலை வாசகம் – லூக்கா 22:40–46

# பரத்திலிருந்து ஒத்தாசை வரும்

புதிய ஆண்டு ஆரம்பமாகி பதினொரு நாட்கள் கடந்துவிட்டது. இப்போது, புதிய ஆண்டிற்குரிய பரவசம் முடிந்து, இது இன்னு மொரு ஆண்டு போலாகிவிட்டது. இந்த ஆண்டை வெற்றிகரமாக ஓடி முடிப்பதற்கு தேவனுடைய வழிநடத்தல் இன்றியமையாதது. வெற் றிகரமாக வாழ்வது என்பதன் பொருளை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு சூழ்நிலையிலும் பரலோக பிதாவாகிய தேவ னின் சித்தத்தை செய்வதே வெற்றிக ரமான வாழ்க்கை. உதாரணமாக, பலர் முன்னிலையில், காரணம் எதுவுமின்றி, எங்களை ஒருவர், தகாத வார்த்தை களை பேசி அவமானப்படுத்தலாம். அந்த வேளையில் கற்பனை கதைக ளில் வரும் சுப்பர் ஹீரோவை போல சண்டை செய்து, எதிரிகளை மேற்கொ ள்வது வெற்றி வாழ்க்கையல்ல. "உங் களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிற வர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" என்ற திருவார்த்தை யின்படி பொறுமையோடு அவர்களுக்காக ஜெபம் செய்ய வேண்டும். எங்கள் பெலவீன நேரங்களில், இக்கட்டான, அவமானமான சூழ்நிலையில், தேவனை நோக்கிப் பார்க்கும் போது அவரிடத்தில் இருந்து எங்க ளுக்கு ஒத்தாசை வருகின்றது. இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, கெத்சமனே பூங்காவிலே, அவர் மிகவும் வியா குலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. அவ்வேளையிலும் அவர் மறுபடியும் ஜெபம் செய்தார். பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து ஜெபம் செய்தார். அந்த வேளையிலே ஒத்தாசை பரத்திலிருந்து வந்தது. அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். பிரியமானவர்களே, இந்த ஒத்தாசை எங்களுக்கும் உண்டு. தேவ தூதன் வழியாகவோ அல் லது வேறுவழியாகவோ பதில் அனுப்பும் தேவன் பரத்திலிருக்கின் றார். எனவே, சூழ்நிலைகளை ஜெயிக்க, பிதாவின் சித்தம் செய்ய, இந்த ஆண்டை வெற்றியோடு கடக்க, பரத்தை நோக்கி, பதில் வரும்வரை காத்திருங்கள். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தி லிருந்து உங்களுக்கு ஒத்தாசை வரும்.

**சங்கீதம் 121:1**

**எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக் கிறேன்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, வியாகுலங்கள் என்னை சூழ்ந்து கொண்டாலும், அவமானங்களை சந்திக்க நேரிட்டாலும், இயேசுவை போல, உம்முடைய திருச்சித்தத்தை நிறைவேற்ற என்னை நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்வு தரும் தெய்வம்...

இயேசு என்னை பாவத்திலிருந்து மீட்டு இரட்சித்தார். மறுபடியும் நான் பாவசேற்றில் விழுந்துவிட்டேன். இது ஊர் அறிந்த உண்மை. நான் இயேசுவுக்கும், என்னை நம்பியிருந்தவர்களுக்கும் துரோகம் செய்து விட்டேன். இனி எனக்கு வாழ்வு இல்லை. என்பாட்டிற்கே நான் வாழ் வேன் என ஒரு வாலிபன் தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டான். இப்படியான சூழ்நிலைக்குள் அகப்பட்டிருந்தால், இனி வாழ்வு இல்லை என்று உங்கள் கண்போன போக்கில் நடக்காதிருங்கள். அதிகாரி கள், ஸ்தாபனங்கள், மனிதர்கள் உங் களை வெறுக்கலாம். ஆனால், மனந்தி ரும்பி தன்னிடம் வரும் யாவருக்கும் பிதாவாகிய தேவன் அருள் புரிகின்ற வராயிருக்கின்றார். பிதா அருள்புரி வார் என்று திரும்பவும் திரும்பவும் பாவம் செய்வது மூடத்தனம். ஆனால், அறிந்தோ அறியாமலோ, ஒன்றின்பின் ஒன்றாக வந்த நிகழ்வுகளால் உந்தப்ப ட்டு, பாவம் செய்து முடங்கிப் போயிருந்தால், உங்கள் பரலோக பிரயாணத்தை விட்டுவிடாதிருங்கள். தன்னுடைய இளைய குமாரன், துணிகரமாக, தனக்குரிய சொத்துக்களை சேர்த்துக் கொண்டு, தூர தேசத்திற்கு சென்று முழுவதையும் அழித்துப் போட்டான். தன் வாழ்வை கெடுத்துக் கொண்டான். அவன் மனந்திரும்பி தந்தையிடம் திரும்ப முடிவெடுத்த போது, தந்தை அவனை அன்புடன் ஏற்றுக் கொண்டார். அரசாங்கத்தினால், கள்வன் என்று நிச்சயித்து, சிலுவை யிலே மரண தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த கள்வன், பகிரங்கமாக அவமானத்திற்குள்ளானான். இனி இந்தப் பூமியிலே அவன் உயிர் வாழப்போதில்லை. இன்னும் சில மணித்தியாலங்களில் மரித்துவிடுவான். ஆனாலும், அந்த வேளையிலே அருகில் சிலுவை யில் தொங்கும் இயேசுவை நோக்கி வேண்டுதல் செய்தான். நித்திய வாழ்வை பெற்றுக் கொண்டான். கர்த்தர் இரக்கம் உள்ளவர். இந்த தியானத்தை இன்று வாசிக்க கூடியதாக, அல்லது கேட்கக்கூடியதாக இருந்தால், உங்களைத் தாழ்த்தி தேவனிடத்தில் சேருங்கள். மனந்த ளர்ந்து பரலோக பிரயாணத்தை இடைநிறுத்தாமல், இலக்கை நோக்கி தொடருங்கள்.

**சங்கீதம் 103:13**

தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

**ஜெபம்**: மனதுருக்கமுள்ள தேவனே, துணிகரமான மீறுதல்களுக்கு என்னை விலக்கிக் காத்தருளும். இனி வாழ்வு இல்லை என்று, அழிவுக்கு என்னை நானே ஒப்புக் கொடுக்காமல், மனந்திரும்பி உம்மிடம் சேரும் இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்கள் வாயின் வார்த்தைகள்...

கடந்த சில ஆண்டுகளாக, சிலரின் பழிச்சொல்லிற்கு ஆளானேன். பல வியாகுலங்களையும், அவமானங்களையும் சகிக்க வேண்டியதாயிருந்தது. என்று தான் கடந்து சென்ற கரடுமுரடான பாதையைக்குறித்தும், அதிலிருந்து தேவன் எப்படி என்னை விடுவித்தார் என்றும் ஒரு தாயார் சாட்சி பகர்ந்தார். அந்த தாயார் கடந்து சென்ற கஷ்டமான பாதையை, ஆலயத்தின் வயதான போதகர் நன்கு அறிந்திருந்தார். ஆராதனை முடிந்தபின், வயதான போதகர், அந்த தாயாரை அணுகி "மகளே! நீ பகிர்ந்து கொண்ட சாட்சி அதிசயமானது. ஆண்டவர் கொடுத்த விடுதலை உண்மையானது. ஆனால் பிதாவின் நாமம், உன்னால் மகிமையடையாதபடிக்கு ஏதாவது காரியத்தை நீ மறைத்து வைத்தாயோ? நீ சும்மா இருக்க எல்லோரும் உன்னை துன்பப்படுத்தினது மெய்தானோ?" என்று கேட்டார். இல்லை போதகர் ஐயா அப்படி ஒன்றையும் மறைக்கவில்லை, யாருக்கும் ஏதும் கெடுதி செய்யவில்லை என்று கூறிவிட்டு, வீடு சென்றாள். அன்றிரவு அந்த தாயானவளுக்கு உறங்க முடியவில்லை. மற்றவர்கள் தன்னை துன்பப்படுத்தியது உண்மை, ஆனால் அதற்கு முன், அவர்களுடன் தான் பேசிய கடுமையான வார்த்தைகள் அவள் நினைவிற்கு வந்தது. அனுபவசாட்சியை பகரும் போது, என்னை ஒரு குற்றமும் செய்யாத நிரபராதி என்று மற்றவர்களுக்கு காண்பித்தது தவறு என்று உணர்ந்து கொண்டாள். பிரியமானவர்களே, எங்கள் வாழ்க்கையில் நடந்த எல்லா விபரங்களையும் பகிரங்கமாக சொல்ல வேண்டும் என்பது பொருள் அல்ல. அயலவர்கள், உறவினர், நண்பர்கள், உடன் சகோதரர்கள் எங்களுடன் மனத்தாங்கல் அடைவதற்கு, எங்கள் பேச்சு அல்லது கிரியைகள் காரணமாக இருந்திருக்கலாம். அவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவ சமுகத்திலே, பேசும்போது, நாங்கள் எங்களை தாழ்த்தி உண்மையை பேச வேண்டும். நாங்கள் பேசும் வார்த்தைகள் இன்னுமொருவரைப் பற்றிய தவறான அபிப்பிரயா யத்தை மற்றவர்களுக்கு கொடுக்கக் கூடாது. எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்கள் இருதயத்தின் நோக்கங்களை அறிந்திருக்கின்றார்.

**பிரசங்கி 5:2**

**தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு.**

**ஜெபம்:** பரலோக தேவனே, மனம்பதறி உம்முடைய சமுகத்தில் துணிகரமாக பேசாமல், என்னை தாழ்த்தி உண்மையை பேசும்படியாய் எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | தை 15

📖 மாலை வாசகம் – யோவான் 14:27

# இயேசு தரும் நித்திய சமாதானம்...

ஒரு சமயம், கர்த்தராகிய இயேசு தாமே, சீமோன் என்னும் பரிசேயனுடைய வீட்டிற்கு போஜனம் பண்ண சென்றிருந்தார். அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ கண்ணீரோடு அவர் பாதத்தில் இருந்தாள். இயேசு தாமே, அநேகமாயிருந்த அவளுடைய பாவங்களை மன்னித்து, சமாதானத்தோடே போ என்று அவளை அனுப்பிவிட்டார். இந்த சம்பவத்தை நீங்கள் லூக்கா ஏழாம் அதிகாரத்திலே வாசிக்கலாம். இந்த உலகிலே சமாதானமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்னும் விருப்பம் எல்லா மனிர்தகளுக்கும் உண்டு. நன்றாக கல்வி கற்க வேண்டும், பின்பு நல்ல வேலையில் அமரவேண்டும், கை நிறைய உழைக்க வேண்டும், வசதிகளுடன் வாழ வேண்டும் என்று அதிகமாக பிரயாசப்படுகின்றார்கள். இதனால் நிம்மதி உண்டாகும் என நினைக்கின்றார்கள். இப்படியாக வசதியாக வாழும் மனிதர்களை காணும்போது, அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள், இவன் நல்வாழ்வு வாழ்கின்றான் என்று அங்கீகரிக்கலாம். ஆனால், உங்கள் உள்ளத்தில் உண்மையாக சமாதானம் இருக்கின்றதா இல்லையா என்பதை நீங்கள் தான் அறிந்திருக்கின்றீர்கள். சூழ்நிலைகள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருந்தால், அதை சமாதானம் என்று சில மனிதர்கள் எண்ணுகின்றார்கள். அப்படி எண்ணுகின்றவர்கள், சூழ்நிலைகளை, தங்கள் அதிகாரத்தினாலும், செல்வத்தினாலும், சமுதாய அந்தஸ்தினாலும், சில வேளைகளிலே வன்முறைகளாலும் கட்டுப்படுத்துகின்றார்கள். இப்படியான இடத்தில் பாரபட்சமும், அநீதியும், துன்மாரக்கமும் இருக்கும். நான் ஒரு பாவமும் செய்யாதவன், நல்ல குடும்பத்தில் பிறந்து, ஒழுக்கமாக வளர்க்கப்பட்டேன், தீய பழக்கங்கள் என்னிடம் இல்லை என்று ஒருவன் சொல்வானாக இருந்தால் அவன் பொய்யன் என்று வேதம் கூறுகின்றது. மனிதன் தன்னுடைய சொந்த கிரியைகளினாலே, அவன் நாடும் நிம்மதியை அடைய முடியாது. அந்த நிம்மதியை பெற்றுக் கொள்ள பாவ மன்னிப்பு அவசியமானது. இயேசு வழியாக மட்டுமே பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக் கொள்ள முடியும். தன்னை உண்மையாக தேடி வந்த எவரையும் புறம்பே தள்ளாத அன்புள்ள இயேசு அண்டை சேருங்கள்.

**லூக்கா 7:48-50**

உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது..., சமாதானத்தோடே போ என்றார்.

**ஜெபம்**: சமாதனத்தின் தேவனே, இந்த உலகம் தரும் நிம்மதியை தேடி இளைப்படைந்து போகாமல், சமாதானக் காரணராகிய, உம்மை நாடி, உமது சமாதானத்தை பெற்றுக் கொள்ள அருள் செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிம்மதி அடைய வழி உண்டு...

இயேசு வழியாக பாவ மன்னிப்பை பெற்ற நாம், அவர் கொடுத்த சமாதானத்தை எங்கள் வாழ்வில் அனுபவிக்க வேண்டும். அந்த சமாதானத்தை உணர முடியாமல் இருக்கும்படியாய் எங்கள் வாழ்வில் நாங்களே தடைகளை ஏற்படுத்திக் கொள்ள கூடாது. பாவ மன்னிப்பு இல்லாமல் சமாதானம் இல்லை. சமாதானத்திற்கு, பாவ மன்னிப்பின் அவசியத்தை உணர்ந்த நாம், மற்றவர்களுடைய தப்பிதங்களை எங்கள் உள்ளத்தில் பதித்து வைக்க முடியாது. அப்படி மற்றவர்கள் காரணத்தோடோ அல்லது காரணமின்றியோ செய்த காரியங்களை மன்னித்துவிடாமல், எங்கள் இருதயத்திலே அவற்றை குறித்து கசப்படைவோமாக இருந்தால், எங்கள் இருதயத்தில் இயேசு தந்த சமாதானத்தை நாங்களே குலைத்துப் போடுகின்றோம். ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறை உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். மன்னிப்பை குறித்து இயேசு ஒரு உவமையை சொன்னார். "ஒரு ராஜா, மனம் இரங்கி, தன்னிடம் கடன்பட்ட தன் ஊழியனின் பெரிய கடனை மன்னித்து விட்டான். மன்னிப்பை பெற்றுக் கொண்ட அந்த ஊழியன், தனக்கு கீழ் வேலை செய்யும், தன் ஊழியனின் சிறிய கடனை மன்னிக்க மனதில்லாமல், அவனை காவலில் போட்டான். இந்த சம்பவத்தை கேள்விப்பட்ட ராஜா, நான் உனக்கு மன்னித்தது போல, நீயும் உன் ஊழியனுக்கு மன்னிக்காமற் போனதென்ன என்று, கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொ டுத்தான். நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்." எனவே தேவ சமாதானம் எங்கள் இரு தயங்களை ஆளும்படிக்கு, இயேசுவிடம் இருந்து பாவ மன்னிப்பை பெற்ற நாங்கள், மற்றவர்கள் எங்களுக்கு எதிராக செய்த குற்றங்களை மனப்பூர்வமாக மன்னிக்க வேண்டும்.

**கொலோசெயர் 3:15**

**தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்**

**ஜெபம்**: இரக்கம் நிறைந்த தேவனே, உம்முடைய மிகுந்த காருண்யத்தினாலே என் பாவங்களை மன்னித்தது போல, நானும் எனக்கெதிராக தப்பிதங்கள் செய்பவர்களை மன்னிக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# படுகுழிகள்

படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான் கல்லைப் புரட்டுகிறவன்மேல் அந்தக் கல் திரும்ப விழும் என்ற நீதிமொழியை பலர் அடிக்கடி கூறுவதுண்டு. இதற்கு உதாரணமாக, பரிசுத்த வேதாகமத்திலே, ராஜாவாகிய அகாஸ்வேரு அரசாண்ட நாட்களில் வாழ்ந்த ஆமான் என்னும் தேசாதிபதியை கூறிக் கொள்வோம். மொர்தகாய் என்னும் யூதனையும், ராஜ்யத்தில் வாழ்ந்த யூத ஜனங்கள் யாவரையும் கொன்று போடும்படி சதி செய்தான். மொர்தகாயை தூக்கிலிடும்படி ஒரு தூக்கு மரத்தை செய்வித்தான், ஈற்றிலே, அகாஸ்வேரு ராஜா, ஆமானை, அவன் செய்த தூக்கு மரத்திலேயே தூக்கிலிட்டான். உபாய தந்திரங்களை பற்றி பேசும் போது, எப்போதும் மற்றவர்கள் செய்யும் சதிகளை பற்றியே நாங்கள் அதிகமாக நினைப்பதுண்டு. ஆனால் நாங்கள் எங்கள் வாழ்க்கையையும் அவ்வப்போது, தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பார்க்க வேண்டும். சாலமோன் ராஜா பெரிய ஞானியாக இருந்த போதிலும், தன் வாழ்விலே, ஆரம்ப நாட்களிலே ஒரு குழியை வெட்ட ஆரம்பித்தான். அதாவது, தேவனை அறியாத ஸ்திரிகளை விவாகம்பண்ண முடிவெடுத்தான். அந்தக் குழி அவனுக்கு ஒரு பொருட்டாக தெரியவில்லை. முடிவிலே தான் வெட்டின குழிக்குள்ளே அவன் விழுந்து போனான். தேவனுக்கு எதிராக பாவம் செய்தான். இப்படியாக, தேவனுடைய வார்த்தைகளுக்கு எதிராக எங்கள் வாழ்க்கையிலும் சிறிய குழிகள் இருக்கலாம். கோபம், வன்மம், பகை அல்லது மாம்சத்தின் கிரியைகள். இவைகளை பாராமுகமாக விட்டு விடும்போது, காலப்போக்கில், எங்களை விழுத்தும் குழியாக அவை மாறிவிடுகின்றது. சிலர் துணிகரமாக, மற்றவர்களுக்கு குழிகளை வெட்டி, முடிவிலே தாங்களே அதற்குள் விழுகின்றார்கள். ஆனால், இன்னும் சில மனிதர்கள், தங்கள் வாழ்க்கையிலிருக்கும் மாம்சத்தின் கிரியைகளை அனல்மூட்டி எரியவிடுவதினால், அவை, அவர்களின் வாழ்க்கையிலே பயங்கரமான குழிகளாக மாறிவிடுகின்றது. எனவே எங்கள் நடையை நாங்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயாமல், எங்கள் கால்களை எல்லாத் தீமையான காரியங்களுக்கும் விலக்கி காக்க வேண்டும்.

**நீதிமொழிகள் 4:26**

**உன் கால் நடையைச் சீர்தூக்கிப்பார் உன் வழிகளெல்லாம் நிலைவரப் பட்டிருப்பதாக.**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள பிதாவே, எங்கள் வாழ்க்கையில் உமது வசனத்திற்கு எதிராக இருக்கும் காரியங்கள் யாவையும் விட்டுவிடும்படியான உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என் விருப்பம் நடைபெறவில்லை...

தாங்கள் நினைத்த பிரகாரமாக காரியங்கள் நடைபெறாதவிடத்து, மனிதர்கள் பல கடுமையான முடிவுகளை எடுத்துக் கொள்ளுகின்றார்கள். பரிசுத்த வேதாகமத்திலே, தாவீது ராஜாவின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த ஆலோசகனாகிய அகித்தோப்பேல் என்னும் மனிதன், தான் நினைத்தபடி காரியங்கள் கைகூடாதபடியால், தன் உயிரை தானே மாய்த்துக் கொண்டான். அதற்கொத்த தாக,கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுத்த யூதாஸ் ஸ்காரியோத்தும் தற்கொலை செய்து கொண்டான். முதலாவதாக, நாங்கள் அறிய வேண்டியது, உயிரை மாய்த்துக் கொள்வது, பிரச்சனைகளுக்கான தீர்வு அல்ல. கொதிக்கும் பானையிலிருந்து, எரியும் நெருப்புக்குள் பாய்வதற்கு ஒத்ததாகவே தங்கள் உயிரை மாய்கின்றவர்களின் நிலைமைகளும் இருக்கும். இந்த உலகத்தை விட்டு சென்றுவிட்டால் எங்கள் கணக்கு முடியப்போவதில்லை. மனிதர்கள் இன்னும் பல தீர்மானங்களை தங்கள் வாழ்வில் எடுத்துக் கொள்கின்றார்கள், அவற்றுள் சில: பிரிவினை. அதாவது, குடும்பப்பிரிவு, உறவுகள் நண்பர்களிடமிருந்து பிரிவு, வேலை செய்யும் இடத்தை மாற்றுதல், பாடசாலையை மாற்றுதல், வீடு, பட்டணம், மாகாணம், தேசம் போன்றவற்றிலிருந்து இடம் பெயருதல், மற்றும் வாக்குவாதங்கள், கலகலப்புக்கள், வன்முறைகள் போன்ற பல காரியங்களை செய்கின்றார்கள். இவைகளினாலே, எங்கள் எண்ணப்படி நடக்காத காரியங்களை மாற்றலாம் என்று நினைக்கின்றார்கள். பிரியமானவர்களே, இந்த உலகிலே நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், எல்லாம் உங்கள் எண்ணப்படியோ, அல்லது இன்னுமொருவரின் எண்ணப்படியோ நடக்கப் போவதில்லை. பெரும் ராஜ்யத்தின் அதிகாரிகள் கொஞ்சக் காலம் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தி, புல்லின் பூவைப் போல மறைந்து போகின்றார்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்யும் மாற்றம், தேவனோடு உங்களை கிட்டி சேர்த்தால் அந்த மாற்றம் நல்லது. பயங்கரமான வனவிலங்கு காடு மாறிவிட்டது ஆனால் அந்த விலங்கு மாறவில்லை என்பது போல நாங்கள் இருக்கக்கூடாது. கருப்பொருள் நாங்கள் தேவ சித்தத்தை நிறைவேற்றி நித்திய ஜீவனை பற்றிக் கொள்ள வேண்டும்.

**சங்கீதம் 37:8**

**கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.**

**ஜெபம்**: சர்வல்லமையுள்ள தேவனே, காரியங்கள் என் விருப்பப்படி நடைபெறாமல் இருக்கும் போது, என் இஷ்டப்படி முடிவுகளை எடுக்காதபடிக்கு, உம்முடைய நேரத்திற்கு காத்திருக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாரிடம் செல்வோம்?

பிதாவாகிய தேவன் கூறுபவைகளை கூறியபடியே செய்து முடிப்பவன், பிதாவின் சித்தத்தை பூரணமாக தன் வாழ்வில் செய்கின்றவனாக இருக்கின்றான். எங்களுடைய வாழ்வில், தேவ சித்தத்தை செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணம் இருந்தாலும், சில வேளைகளிலே மனதில் கேள்விகள் தோன்றுவதுண்டு. மோசே என்னும் மனிதனை தேவன் அழைத்தபோது, அவனுடைய மனதிலே அநேக கேள்விகளும் சந்தேகங்களும் இருந்தது. அவைகள் பெருமைக்குரியவைகள் அல்ல. அவன் தன்னை தாழ்த்தி தன் மனதிலுள்ளவைகளை தேவனுக்கு தெரியப்படுத்தினான். தேவன்தாமே அவை யாவற்றிற்கும் பதிலளித்தார். பின்பு அவன் விசுவாசம் ஸ்திரப்படும்படியாய் பல அதிசயங்களைச் செய்தார். அதே போல நாங்களும், எங்கள் மனதிலுள்ள சந்தேகங்களை தேவனுடைய பாதத்திலே, தாழ்மையுடன், வைக்கும் போது, அவை யாவற்றையும் அவர் தெளிவு படுத்துவார். ஆனால் தேவன் கூறுவதை செய்தபின்பு, நாங்கள் எதிர்பார்க்கும் முடிவு வரவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. யோனா என்னும் தேவ மனிதன், நினிவே பட்டணத்தின் அக்கிரமங்களையும், அதனால் வர இருக்கும் அழிவையும் குறித்து முன்னறிவித்தான். தேவன் கூறியபடியே செய்து முடித்தான். அதன் பின்பு, தான் உரைத்தபடி அழிவு வரவேண்டும் என்று காத்திருந்தான். ஆனால் தேவனோ, நினிவே பட்டணத்தாரின் மனந்திருப்புதலை கண்டு, வரவிருந்த அழிவை, அனுமதிக்காத போது, யோனா எரிச்சல் அடைதவனாய். தேவ சமுகத்தை விட்டு ஓடுகின்றவனாக இருந்தான். நாங்கள் அப்படி இருக்கலாகாது. இவைகளை விட்டு என்பாட்டிற்கு ஒதுங்கிவிடுவேன் என்று எண்ணங் கொள்ளக் கூடாது. தேவனுடைய சித்தத்தை செய்யாவிட்டால், வேறு எதைச் செய்வீர்கள்? தேவனை விட்டு யாரிடத்தில் போவீர்கள்? வேறு எங்கே நித்திய வாழ்வு உண்டு? தேவனிடத்தில் மட்டுமே உண்டு. நித்திய ஜீவனை அடைவதே எங்கள் பந்தயப் பொருள். தேவன் கூறுவதை செய்வோம். தேவன் கூறியவைகளின் முடிவை அவரே நிர்ணயிப்பார். வாக்களித்த நித்திய வாழ்வை எங்களுக்குத் தருவார்.

**யோவான் 6:68**

ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, உம்முடைய சித்தத்தை செய்வதிலிருந்து ஒதுங்கிப் போகும் எண்ணத்தை முற்றிலும் என்னை விட்டு அகற்றி, நீர் சொன்னதை சொன்னபடி செய்ய கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முடிவில்லாத வாழ்வை நோக்கி...

"ஒரு மனிதன் குறிப்பிட்ட காரணத்திற்காக தன் உயிரை தானே மாய்த்து கொண்டான்" என்ற செய்தியை கேட்கும் போது, காரணம் எதுவாக இருந்தாலும், அவன் மதியீனமாக நடந்து கொண்டான் என்று மனிதர்கள் கூறிக் கொள்வார்கள். பூமியிலே மனிதனுடைய வாழ்நாட்கள் குறுகியதாக இருந்தாலும், ஒவ்வொரு மனிதனுக்கும் தேவன் ஒரு அழகான திட்டத்தை வைத்திருக்கின்றார். மனிதனுடைய அறிவு குறைவுள்ளது ஆதலால் இதன்பின்பு இனி ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வருகின்றான். அந்த முடிவிலே, வாழ்க்கையை இயேசுவிடம் கொடுக்கும் போது அவர் ஒரு புதிய ஆரம்பத்தை ஏற்படுத்துகின்றார். இந்த பூமியிலே புதிய வாழ்வை கொடுக்கின்றார். புதிய இருதயத்தை கொடுக்கின்றார். குருடான மனக் கண்களை தெளிவுபடுத்தி விடுகின்றார். இந்த வழியை அறியாமல் தன்னை மாய்த்துக் கொள்பவனை மதியீனனைப் போல மாய்த்துக் கொண்டான் என்று சொல்லுவோம். இந்த வாழ்க்கை தற்காலிகமானது, யாவரும் ஒரு நாள் இந்த உலகைவிட்டு கடந்து செல்ல வேண்டும். இப்படிப்பட்ட வாழ்வை வாழாமல் இந்த பூமியிலே தங்கள் உயிரை மாய்த்துக் கொள்பவர்கள் மதியீனர்கள் என்றால், தேவன் வைத்திருக்கும் நித்திய வாழ்வை அசட்டை பண்ணி, அதை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல், துணிகரமாக தன்னை நித்திய மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பவனை என்ன சொல்வது? அல்லது இயேசு கொடுத்த இரட்சிப்பை பெற்று, நித்திய வாழ்வைப்பற்றி நன்கு அறிந்தவன், தன் வாழ்வில் நித்திய வாழ்வுக்குரிய கிரியைகளை நடத்தாமல், தன் ஆத்துமாவை கெடுக்கும் பாவச் செயல்களை விட்டுவிடாமல், ஆங்காங்கே தன் வாழ்வில் அவைகளை பற்றிக் கொண்டிருந்தால், அவன் எவ்வளவு பரிதபிக்கப்படத்தக்கவன்? தன்னை நித்திய மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தவனாய் தன் உயிரை சிறிது சிறிதாக கொன்று போடுகின்றவனாக இருக்கின்றான். பிரியமானவர்களே, ஆத்துமாவை கெடுக்கும் எல்லாவிதமான மாம்சத்தின் கிரியைகளையும் விட்டுவிடுங்கள். நித்திய ஜீவனுக்கு ஈடானாது இந்த உலகில் ஏதும் இல்லை. அதை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்.

**1 தீமோத்தேயு 6:12**

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப்போராடு,நித்திய ஜீவனைப் பற்றிக் கொள் அத ற்காகவே நீ அழைக்கப்பட்டாய்**

**ஜெபம்**: பரலோக பிதாவே, நீர் எங்களுக்காக ஏற்படுத்தியிருக்கும் நித்திய வாழ்வை (ஜீவனை) எந்த விதத்திலும் நான் அசட்டை பண்ணாதபடிக்கு, அதை ஆசையாய் பின் தொடர என்னை வழிநடத்துவீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | தை 21

📖 மாலை வாசகம் – கலாத்தியர் 3:26

# தேவனுடைய ஜனங்கள்

ஒரு நல்ல தாயானவளின் எண்ணமும் ஏக்கமும் எப்போதும் தன் பிள்ளைகளை குறித்ததாகவே இருக்கும். பிள்ளைகள் வயது வந்து பெரியவர்களாகி, திருமணம் செய்து, அவர்களுக்கு பிள்ளைகள் பிறந்தாலும், அந்த தாயானவள் தன் பிள்ளைகளைக் குறித்த கரிசனையில் குறைந்து போவதில்லை. தன் வீட்டில் இருந்தால் என்ன, வேலை செய்தால் என்ன, வேறு பொழுது போக்கு காரியங்களில் ஈடுபட்டால் என்ன, தன் பிள்ளைகளின் நலனுக்காக, எப்போதும், எந்த வேளையும், தியாகம் செய்ய ஆயத்தமுள்ளவளாக இருப்பாள். என் கடமை முடிந்தது, இப்போது என்னுடைய உல்லாச நேரம் அல்லது என்னுடைய தனிப்பட்ட நேரம் என்று ஒன்றையும் வைத்திருப்பதில்லை. நாங்கள் தேவனோடு வாழும் வாழ்க்கையும் இதற்கொத்ததாகவே இருக்க வேண்டும். ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் நாளாந்த நடபடிகள் என்ன? காலையில் எழுந்து, வேதத்தை தியானித்து, ஜெபம் செய்து, பின்பு வேலை செய்வதற்கோ அல்லது கல்வி கற்பதற்கோ கடந்து செல்கின்றான். காலை தியானத்துடன், தேவனைப்பற்றிய கடமை முடிந்தது என்று கூறி, மிகுதியான நேரம் தன்னுடையது, என் ஈஷ்டப்படி காரியங்களை செய்வேன் என்பது கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல. நல்ல தாயானவளுக்கு தன் பிள்ளையை குறித்த கரிசனை அவள் மனதில் எப்போதும் இருப்பது போல, எங்கள் உள்ளத்தில் தேவனை குறித்த நேசம் இருக்க வேண்டும். வேலை செய்யும் இடத்தில் எதிர் நோக்கும் சூழ்நிலைகளில், எங்கள் கண் போன போக்கில் தீர்வு காணமுடியாது. நான் இயேசுவின் பிள்ளை என்ற எண்ணம், இது எனக்கு தகுதியானதா? இதில் என் பரம பிதாவின் சித்தத்தை நான் எப்படி நிறைவேற்ற முடியும்? எப்படி என் வழியாக பிதாவாகிய தேவனின் நாமம் மகிமை அடைய முடியும் என்ற சிந்தனை எப்போதும் இருக்க வேண்டும். நான் காலை மாலை வேத தியானங்களை முடித்து விட்டேன், ஞாயிறு ஆராதனையில் பங்குபற்றி விட்டேன். உபவாச நாட்களும் முடிந்தது, இனி என் உல்லாசம் என்று, இயேசுவை எங்கள் வாழ்வின் ஒரு பகுதியில் மட்டும் வைத்து நாங்கள் வெற்றி வாழ்வு வாழமுடியாது. என் செயல்கள் எல்லாவற்றிலும் நான் இயேசுவின் பிள்ளை என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

**1 பேதுரு 2:10**

இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்

**ஜெபம்**: பரலோக தந்தையே, இந்த உலகிலே, என் வாழ்க்கையின் நோக்கத்தை நான் உணர்ந்து கொள்ளும்படியாய், பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன் சிருஷ்டிகரை தேடு

கல்வி கற்பதில் மிகவும் ஆர்வமுள்ள சிறு பையன், தவறாமல் ஞாயிறு ஓய்வு நாள்பாடசாலைக்கு சென்று வந்தான். வாலிப பிராய த்திலே, உயர்கல்வி கற்க வேண்டும் என்று இன்னும் அதிக முயற்ச்சி செய்தான். அவ்வப்போது, சபை ஒன்று கூடுதலை விட்டுவிட ஆரம்பி த்தான். படிக்க வேண்டும் என நல்ல நோக்குடன் தானே, ஆலயத் திற்கு வரவில்லை என்று பெற்றோரும் பெரும் கவனம் எடுக்கவில்லை. இள மையிலே சீராக கற்க வேண்டும் என்று அவனை இன்னும் ஊக்குவித் தார்கள். இறுதி பரீட்சையிலே, அதி திறமைச் சித்தி பெற்று, விசேஷ பல்க லைக்கழத்திற்கு அனுமதி பெற்றுக் கொண்டான். படிப்படியாக ஆலயம் செல்வதற்கே அவனுக்கு நேரமில்லாமல் போய்விட்டது. ஒரு நாள் அவனைச் சந்தித்த போதகர், தம்பி ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு படி க்கின்றாய், எந்த இலக்கை நோக்கி ஓடுகின்றாய் என்று கேட்டார்? நன்றாக கற்று நல்லாக உழைத்து சந்தோஷமான வாழ்க்கை வாழ வேண்டும் என்று கூறினான். கல்வி கற்பதில் தவறில்லை, நன்றாக கற்றுக் கொள். ஆனால், நீ எவ்வளவு கற்றாலும், இயேசு இல்லாத வாழ்க்கையில் சந்தோஷம் இருக்காது என்று தயவாய் கூறினார். நான் இயேசுவை மறுதலிக்கவில்லை போதகரே என்று மறுஉத்தரவு கூறினான். நீ இன்னும் அப்படிச் செய்யவில்லை, ஆனால், நீ எங்கிருந்தாலும், தீங்குநாள் வருமுன், உன் நடைகளை நீ இப்போது சீர்ப்படுத்தி, வாலிப வயதிலே கர்த்தரைத் தேடு. இல்லையென்றால் நீ பெற்றிருக்கும் சந்தோஷமான வாழ்க்கை உன்னை விட்டு சிறகடித்துப் பறந்து போய்விடும் என்றார். பிரியமானவர்களே, தேவனை அறிந்த பெற்றோர்கள் கூட, வாலிபத்திலே தானே படிக்க வேண்டும், வாலிபத் திலே தானே உடுத்த வேண்டும், வாலிபத்திலே தானே உல்லாசமாக வாழ வேண்டும் என்று தங்கள் பிள்ளைகளை சற்று திசை திரும்ப அனுமதிக்கின்றார்கள். ஆனால் வாலிபனே, காலம் கடந்து போகும் முன் உன்னை சிருஷ்டித்தவரை தேடு என்று வேதம் கூறுகின்றது. இயேசுவை ஒரு புறம் வைத்து விட்டு தன் வாழ்க்கையில் சந்தோ ஷமானவைகளைத் தேடுபவன், அத்திவாரம் இல்லாமல் வீடு கட்டுகி ன்ற மதியீனனுக்கு ஒப்பாகயிருக்கின்றான்.

**பிரசங்கி 12:1**

**நீ உன் வாலிபப்பிராயத் திலே உன் சிருஷ்டிகரை நினை**

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்து அறியும் தேவனே, என் வாழ்க்கை யின் எந்தக் கட்டத்திலும் உம்மைத் நாடித் தேடுவதை முதன்மையாக வைத்திருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனமகிழ்ச்சி தரும் வேதம்

தேவனோடு வாழும் வாழ்க்கையை குறித்த உங்கள் நிலைப்பாடு என்ன? உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்ததான உங்கள் அபிப்பிரயாயம் என்ன? பல கட்டளைகளை கைகொள்ள வேண்டும், இந்தக் காரியத்தை அப்படிச் செய்தால் போதகர் பேசுவார். இதை பார்த்தால் குற்றம். அதை உடுத்தினால் பாவம். இப்படியாக உங்கள் மேல் திணிக்கப்பட்டிருப்பவைகள் கட்டளைகள் என்று நினைத்து வாழ்கின்றீர்களா? அவை வாழ்க்கைக்கு பாரமாக தோன்றுகின்றதா? அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும், பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்று கூறினார். மனமடிவடைந்து, சோகமான பாடலுடன் இதை அவர் கூறவில்லை. இயேசுவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன். கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி "**ஆசையாய்த்**" தொடருகிறேன். தேவனுடைய கற்பனைகள் எங்கள் ஆன்மாவுக்கு அருமருந்து. எப்படி உங்கள் சரீரத்தில் புண் ஏற்படும் போது, வைத்தியரிடம் சென்று, தகுந்த மருந்தை எடுக்கும் போது, அந்த புண்ணானது முற்றிலும் மாறி, தேகம் ஆரோக்கியமடைகின்றதோ. அதைவிட மேலாக, மனதில் உருவாகும் புண்கள், கிலேசங்கள், கசப்புக்கள், தோல்விகள் யாவையும் அகற்றி, எங்கள் ஆன்மாவை ஆற்றி தேற்றும் வசனங்களே (கற்பனைகள், கட்டளைகள், பிரமாணங்கள், நீதி நியாயங்கள், சத்திய வழிகள்) தேவனுடைய வேதம். சத்திய வசனங்களினாலே நாங்கள் யாவரும் தேற்றப்படுகின்றோம். தேவனோடு வாழும் போது, பல சவால்கள், எதிர்ப்புக்கள், ஏளனங்கள் வரலாம். ஆனால், கிறிஸ்துவின் நிமித்தம் அவை எங்களுக்கு ஏற்படும் போது அவை எங்களுக்கு ஆனந்த பாக்கியமாக இருக்கின்றது. சத்திய வேதம் எப்போதும் எங்கள் மனமகிழ்சியாக இருக்க வேண்டும். எனவே, தேவனோடு வாழ்ந்து, தேவ சித்தத்தை நிறைவேற்றுவது, ஒரு சோகக் கதையல்ல, திணிக்கப்பட்டவைகள் கட்டளைகள் அல்ல, மாறாக, அவைகளினாலே நாம் நித்திய வாழ்வை அடைந்து கொள்கின்றோம்.

**சங்கீதம் 119:165**

**உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு அவர்களுக்கு இடறலில்லை.**

**ஜெபம்:** அன்பின் பிதாவே, முடிவில்லாத வாழ்வை பெறும்படியாய் அழைத்தவரே, அதன் மேன்மையை உணர்ந்து மன நிறைவோடு உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒளி வீசும் சுடர்கள்...

இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது. அந்த மெய்யான ஒளி இயேசு கிறிஸ்துவே. அவரிடத்திலிருந்து வரும் அந்த திவ்விய ஒளியை கொண்டு செல்லும் சுடர்களாக, தம்முடைய பிள்ளைகளாகிய எங்களை நியமித்திருக்கின்றார். சாபத்திலுள்ளவர்களை சபிக்கும் படி அல்ல. பாவத்திலே வாழ்பவர்களை பாதாளத்தில் இறக்கும்படியல்ல. தேசத்தின் மக்களால் மாசுபட்டிருக்கும் தேசங்களை சபிக்கும்படியல்ல. அவர்களை பாவ, சாப கட்டுகளிலிருந்து விடுவித்து, திவ்விய அழைப்பின் ஆசீர்வாதத்தை அவர்களும் சுதந்தரிக்கும்படியாகவே நாங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றோம். நீங்கள் வாழும் தேசத்திற்காகவும், பாவ இருளில் அமிழ்ந்து கொண்டிருக்கும் தேசங்களுக்காகவும், ஜெபம் செய்யுங்கள். நீங்கள் வாழும் தேசத்தையும், அழிந்து கொண்டிருக்கும் மற்றய தேசங்களையும் உங்கள் வாயினால் சபிக்காதிருங்கள். அப்படி அந்தத் தேசங்களை சபிப்பவர்களுடன் உடன்படாதிருங்கள். தேசங்களிலே இருள் சூழ்ந்து கொண்டிருப்பது உண்மை, தேவ பிரமாணங்களுக்கு எதிரான காரியங்கள், பல தேசங்களிலே சட்டங்களாக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் உண்மை. ஆனால், நாங்கள் எல்லாத் தேசங்களுக்குமாக ஊக்கத்தோடு ஜெபிக்க வேண்டும். தேசங்களை எச்சரிப்பதற்கு தேவ மனுஷர்கள் சிலரை தேவன் அனுப்புவது உண்மை. அப்படிப்பட்ட எச்சரிப்பு, ஜனங்கள் அழிந்து போவதற்காக அல்ல, தங்கள் இருளான வாழ்க்கையிலிருந்து ஜனங்கள் மனந்திரும்பும்படிக்காகவே தேவன் அப்படிச் செய்கின்றார். எனவே, தேசங்களுக்காகவும் அதை ஆளும் அதிகாரிகளுக்காகவும் ஜெபியுங்கள். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவருடைய சுடர்களாக எங்கள் வெளிச்சம் மற்றவர்கள் மேல் பிரகாசிக்கட்டும். இருளில் உள்ள தேசங்கள், விடுதலையடையும்படிக்கு இன்றிலிருந்து உண்மை மனதோடு ஊக்கமாக ஜெபியுங்கள்.

**மத்தேயு 4:15**

**இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது**

**ஜெபம்:** அன்புள்ள தேவனே, அழிவை நோக்கிச் செல்லும் தேசத்தின் குடிகள், தங்கள் அக்கிரமத்தில் அழிந்து போகாமல், உண்மையான மனதுடன் ஜெபிக்கும்படிக்கு, என்னை வழிநடத்தும்.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒன்றித்து செயற்படுங்கள்

ஒரு ஊரிலே வசித்து வந்த மனிதனுக்கு ஐந்து குமாரர்கள் இருந்தார்கள். ஐவரும், நன்றாக கற்று தேர்ச்சியடைந்தார்கள். மூத்தவன் மருத்துவராகவும், மற்றவர்கள் முறையே, பொறியியலாளராகவும், சட்டத்தரணியாகவும், கணக்காளராகவும், ஆசிரியராகவும் வேலை பார்த்து வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும், தங்களிடம் உள்ள படிப்பையும் உத்தியோகத்தையும் குறித்து ஆலோசனை கேட்பவர்களுக்கு அவரவர் படித்த படிப்பே நல்லதென்றும், தாங்கள் பார்க்கும் உத்தியோகமே மேன்மையானது என்றும் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் ஒவ்வொருவரும் மற்றவர்களின் சேவையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தங்கியிருப்பதை உணராதிருந்தார்கள். யாவரும் வைத் தியரானால், வைத்திய உபகரணங்களை செய்வதற்கு பொறியியளாளர் இல்லாதிருப்பார்கள். யாவரும் ஆசிரியரானால், யார் கணக்கு வழக்குகளை சட்டப்படி செய்து, ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவார்கள்? இதே போலவே எங்கள் குடும்பங்களும், சமூகமும் ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்கின்றோம். இவையாவும் தேவனுடைய திட்டத்திற்கு உட்பட்டிருக்கின்றது. குறிப்பாக தேவனுடைய ஊழியத்தை செய்யும் ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாக இருக்கின்றோம். ஒருவர் நன்றாக பாடி வாத்தியக் கருவிகளை வாசித்து துதி ஆராதனையை வழிநடத்துகின்றார். போதகர் நன்றாக பிரசங்கிக்கிறார். இப்படியாக தேவனுடைய ஜனங்களின் பக்திவிருத்திக்காக வரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, ஒரு சுவிசேஷகர், சபை அவசியமில்லை, போதகர் தேவையில்லை என்று கூறமுடியுமா? முடியாது. யாவரும் தற்போது சுவிசேஷகர்களானால், அடுத்த சந்ததியின் சுவிசேஷர்களாக இருக்கும் சிறார்கள், வாலிபர்களை, கர்த்தருக்குள் வளர்ந்து வரும்படி யார் வழிநடத்துவார்? குடும்ப, சமுக, நகர தேச மட்டத்திலும் இப்படிப்பட்ட பாகுபாடு எங்களுக்குள் இருக்கலாகாது. தேவனுடைய அனுக்கிரகங்களை பற்றி எதிர்த்து விமர்சிக்காமல், ஒருவரை ஒருவர் ஒப்பிட்டு, பெருமையடையாமல், ஒரு மனதோடு தேவ சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றுவோம்.

**1 கொரிந்தியர் 12:17**

**சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே?**

**ஜெபம்:** பரலோக தந்தையே, உம்முடைய சித்தப்படி நீர் பகிர்ந்து கொடுத்த வரங்களை ஆசீர்வாதமாக எண்ணி, ஒருமனதோடு ஒன்றிணைந்து உம்முடைய திருச்சித்தத்தை நிறைவேற்ற என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஈடு இணையில்லாத மகிமை

ஆபிரகாம் என்னும் மனிதனை பற்றி இன்று நாங்கள் அதிகமாகவும், பெருமிதமாகவும் பேசிக் கொள்வோம். இன்று அவருடைய வாழ்க்கையை குறித்து சற்று ஆராய்ந்து சிந்தனை செய்வோம். தேவன் அவரை அழைத்த போது, ஆபிரகாமுக்கு சுமார் 75 வயதாக இருந்தது. அவருடைய மனைவியும் 65 வயதாகியும், அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை. அந்த காலகட்டத்திலே, உலகிலே பல மனிதர்கள் இருந்தார்கள், சில நாடுகளிலே ராஜாக்கள் இருந்தார்கள். பல விசேஷித்த மனிதர்களும். செல்வந்தர்களும், அவர் இருந்த ஊரிலும், இந்த உலகிலும் இருந்திருப்பார்கள். ஆபிரகாமோ ஒரு சாதாரண மனிதனாக இருந்தார். பலரும் அவர்களின் நிலையை கண்டு பரிதபித்திருப்பார்கள். அப்படிப்பட்ட மனிதனை இன்று நாங்கள் விசுவாசத்தின் தந்தை என்று பெருமிதமாக பேசிக் கொள்கின்றோம். கிறிஸ்துவுக்குள் நாங்கள் யாவரும் ஆபிரகாமின் சந்ததியாக மாற்றப்பட்டிருக்கின்றோம். தேவன் கொடுத்த வாக்கின் பிரகாரமாக, வானத்து நட்சத்திரங்களைப் போல அவருடைய சந்ததியை பலுகச் செய்திருக்கின்றார். இன்று நீங்கள் யார்? நாட்டின் தலைவரா? அல்லது உலகத்திலே ஒரு பெயர்பெற்றவரா? பெரும் செல்வந்தரா? பிரியமானவர்களே, தேவன் தம்முடைய கிரியையை நடப்பிப்பதற்கு இந்த உலகின் அளவு கோலை பயன்படுத்துவதில்லை. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார் எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார். தன்னைத் தாழ்த்தி அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கும் மனிதர்களோடு அவர் தம்முடைய அதிசயமான கிரியைகளை நடப்பிக்க ஆயத்தமுள்ளவராயிருக்கின்றார். அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். இந்த உலகின் அளவு கோலின்படி, நாங்கள் அற்பமானவர்களாக இருந்தாலும், இனி வரவிருக்கும் ஈடில்லாத மகிமையை, ஆபிரகாமைப் போல, உறுதியாய் விசுவாசியுங்கள். அதை நிச்சயமாக தேவன் எமக்கும் தருவார்.

**எபேசியர் 2:7**

**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.**

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, இந்த உலக அளவுகோலின் படி நீர் என்னை பார்க்காமல், உம்முடைய திவ்விய சுபாவத்திற்கு பங்காளியாகும்படி அழைத்த மா தயவுக்காக உமக்கு நன்றி.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெலவீனங்களை அறிந்த தேவன்

சில வருடங்களாக, ஒரு காரியாலயத்தில் வேலை செய்து வந்த மனிதன், எதிர்பாராத நேரத்திலே, திடீரென ஒரு நாள் தன் வேலையை இழந்து போனான். தான் செய்யும் வேலையில் சிரத்தை யுள்ளவனாக இருந்தாலும், இது அவனுடைய இரண்டாவது அனுப வமாக இருந்தது. வேலையில்லை என்றால் நாளைக்கு பிள்ளைகள் என்னத்தை உண்பார்கள், வாடகைப் பணம் கட்ட வேண்டும், பாடசாலைக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று, அதிக கரிசனையோடு, அவனும் அவன் மனைவியும், ஊக்கத்தோடு, வேதத்திலே காணும் அநேக வாக்கு த்தத்தங்களை அறிக்கையிட்டு, புதிய வேலை கிடைக்கும்வரை ஜெபம் செய் தார்கள். அந்த மனிதனும் அவனுடைய மனைவி மட்டுமல்ல, நாங்கள் யாவ ரும், எங்கள் வாழ்க்கைக்கு தேவை யான அநேக காரியங்களுக்காக தின மும் இயேசுவின் நாமத்தில் ஜெபித்து வருகின்றோம். இந்த சிலாக்கியம் தேவ னுடைய கிருபை. இப்படியாக, தேவை கள் வரும்போது, தேவனுடைய பாதத்தில் சேர்ந்து, பிரதிஷ்டைகளை முன்வைத்து, திடநம்பிக்கையோடு, நாளாந்த வாழ்க்கைக்கான, தேவை களுக்காக ஜெபிக்க அறிந்திருக்கும் நாங்கள், எங்கள் உள்ளான மனி தனிலே இருக்கும் பெலவீனங்கள் நீங்கும்படியாக, இன்னும் அதிக ஊக்கத்தோடு தேவனண்டை சேர வேண்டும். காரியாலயத்தில் வேலை இழந்து போன அந்த மனிதன், சிரத்தையோடு வேலை செய்பவனாக இருந்தாலும், அவன் முற்கோபம் உள்ளவனாக இருந்தான். இடந் துறை, அதிகாரங்கள் என்று பாராமல், மனிதர்களோடு, கடுமையாக பேசும் சுபாவமுள்ளவனாக இருந்தான். வேலைக்கும் ஆகாரத்திற்கும் ஜெபிப்பதைவிட, முதலாவதாக அவன் தன் மாம்சத்திற்குரிய பெல வீனம் நீங்கும்படியாய் ஜெபிக்க வேண்டும். அது போலவே எங்கள் வாழ்க்கையை கெடுத்துவிடக்கூ டிய பெலவீனங்களை தேவனுடைய சமுகத்திற்கு கொண்டு சென்று, பதில் காணும்வரை ஊக்கத்தோடு ஜெபிக்க வேண்டும்.

**எபிரெயர் 4:15**

நம்முடைய பலவீனங்க ளைக்குறித்துப் பரிதபிக்க க்கூடாத பிரதான ஆசா ரியர் நமக்கிராமல், எல் லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக் கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

**ஜெபம்**: எங்கள் நிலையை அறிந்த தேவனே, என்னுடைய உள்ளான மனிதனை கெடுக்கக்கூடிய சுபாவங்களை, என்னைவிட்டு முற்றிலிலும் அகற்றி ஜெயங்கொள்ளத் தக்கதாய் பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனத்திருப்தி

நாளாந்தம் தங்களுடன் இடைப்படும் மனிதர்களின் நிலைகளை தங்கள் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிட்டு, மனிதர்களில் பலர் திருப்தியடைவதுண்டு. இவர்களில் சிலர், தங்கள் வாழ்விலிருக்கும் செல்வ செழிப்பு மற்றும் செல்வாக்கினால் உண்டான உலக மேன்மையைக் குறித்து பெருமை அடைவதுண்டு. நாங்கள் அப்படிப்பட்ட மனிதர்களைப் போல இல்லாவிடினும், எங்களை அறியாமலே வேறு வழிகளில் எங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டு திருப்தியடையும் சந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் உண்டாகி விடுகின்றது. அவற்றை ஆராய்ந்து பார்த்து, கர்த்தர் முன்னிலையில் எங்கள் பார்வையை செம்மைப்படுத்த வேண்டும். பொதுவாக, நற்கிரியைகளை செய்ய விருப்பமுள்ள மனதுள்ளவர்கள், தங்கள் பொருளாதார சமுக நிலைமையை விட கீழ் நிலையில் இருக்கும் மனிதர்களை கண்டால், அவர்களுக்கு உதவும்படியாய் விரும்புகின்றார்கள். ஆனால் தங்கள் பொருளாதார சமுக நிலையைவிட உயர்வானவர்களைக் காணும் போது, அவர்கள் மனநிலை வேறுபடுகின்றது. “ஐசுவரியம் உள்ளவர்கள்” என்ற தலைப்பில், வேதத்தில் காணும் சில பாத்திரங்களை குறித்து சிந்தித்து, அந்த மனிதர்களைக் குறித்த பல அபிப்பிராயங்ளை தங்கள் மனதிலே ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். பொருளாதாரம் மட்டுமல்ல, வேறுபிரிக்கப்பட்ட வாழ்வு என்ற தலைப்பிலும், தங்கள் நிலைகளை மேன்மை என்று நிச்சயிக்கின்றார்கள். மற்றவர்களுடைய வாழ்வோடு எங்கள் வாழ்வை ஒப்பிடுவதால் உண்டாகும் மனத்திருப்தி அநித்தியமானது. எங்கள் திருப்தியானது, மற்றவர்களின் நிலையை மையமாக கொண்டதாக இருக்கும் என்றால், மற்றவர்களின் நிலை மாறும்போது, எங்கள் திருப்தி நிலையும் மாற்றமடையும். எங்கள் கருத்துக்களாலும், எங்கள் கிரியைகளாலும் எங்கள் மனம் ஒரு போதும் திருப்தியடைவதில்லை. கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடக்கின்றவனே தன் வாழ்வின் உண்மையான மனத்திருப்தியை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் கண்டடைகின்றான். தேவனுடைய சித்தத்தை அவன் தன் வாழ்வில் நடப்பிப்பதால், அவன் ஆத்துமா திருப்தியடைகின்றது.

**எரேமியா 31:25**

நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன்

**ஜெபம்**: அன்பும் இரக்கமுள்ள பிதாவே, இந்த உலகத்திலுள்ளவைகளால் என் மனதை நான் தேற்றிக் கொள்ளாமல், ஜீவன் தரும் உம்முடைய திருவார்த்தைகளால் என்னைத் தாங்கி வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ பணிக்காக ஜெபிப்போம்

ஊழியங்களுக்காக ஜெபிப்போம் என்று கூறும் போது, உங்கள் மன திலே தோன்றும் நினைவுகள் என்ன? பொதுவாக விசுவாசிகள் மத்தி யிலே தோன்றும் எண்ணக் கருத்துக்கள் சிலவற்றை பார்ப்போம்., நாங்கள் செல்லும் ஆலயம் வளரவேண்டும். எங்கள் சபையில் ஆத்து மாக்கள் பெருக வேண்டும். எங்கள் சபையின் கட்டிடங்கள் பெருக வேண் டும். நாங்கள் செய்யும் பலவிதமான ஊழியங்கள் வளர வேண்டும். எங்கள் சபையின் ஊழியங்கள் தேசிய மட்ட த்திற்கு, அல்லது சர்வ தேசமட்டத் திற்கு செல்லவேண்டும். அந்த விரு ப்பங்கள் யாவும், தேவனுடைய சித்த த்தை, உங்கள் வாழ்வில், இந்த பூமி யில் நிறைவேற்றுவதாக இருந்தால் நல்லது. நாங்கள் செல்லும் ஆலயத் திற்காக ஜெபிக்க வேண்டும். நிறுத்தி விடாமல், அயலிலே, பட்டணத்திலே நடக்கும் மற்றய தேவ ஊழியங்களு க்காகவும் ஜெபியுங்கள். குறைகளை மட்டும் கண்டு கொள்ளாமல், குறைகள் நிறைவாகும்படி ஜெபியுங்கள். முதலாவதாக, சபையூடாக உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். அதிலே கருத்துள்ளவர்களாக இருக்க வேண் டும். அதே வேளையில், எங்களால் செய்யமுடியாத நற்கிரியைகளை, இன்னுமொருவர் செய்யும் போது, அவர்களுக்காக ஜெபியுங்கள். தேவ மனிதனாகிய பவுல் என்பவரை துன்பப்படுத்த மனதுள்ளவ ர்களாய், போட்டி மனப்பான்மையுடன், சுத்த மனதோடே இயேசு கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள் என்று அறிந்த போது, அவர் எரிச்சல் கொள்ளவில்லை, மாறாக, “வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார் அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்” என்று கூறினார். நாங்கள் ஒருவரோடு ஒருவர் போட்டியிடும்படி அல்ல, ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்கி, இரட்சிப்ப டையாதவர்களுக்காக மட்டுமல்ல, எங்களோடுகூட தேவ பணிக்காக பிரயாசப்படும் யாவருக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

**1 தீமோத்தேயு 2:1**

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.

**ஜெபம்:** அன்பின் தேவனே, இந்த பூமியிலே உம்முடைய திருச்சித்தம் நிறைவேற்ற பிரயாசப்படும் யாவருக்காகவும் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும் என்ற உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேசத்தின் அதிகாரங்கள்

இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, ரோம அரசாங்கத்திற்கு வரி செலுத்துவது சரியா என்று சிலர் அவரை கேட்டார்கள். இராயனுக்குரியதை (ரோமரின் இராஜா) இராயனுக்கும் தேவனுக்குரியதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள். எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள் எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள் எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள். (ரோமர் 13:7). ராஜாவுக்குரியதை மட்டுமே ராஜாவுக்கு செலுத்த வேண்டும். தானியேல் என்பவன், அந்நிய தேசத்திலே ராஜ பணி செய்து வந்த போது, ஒரு சமயம், தேவனை வழிபட முடியாது, ராஜாவை மாத்திரம் வழிபட வேண்டும் என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்ட போது, தானியேல், தேவனாகிய கர்த்தரை வழிபடுவதை நிறுத்தவில்லை. ஏனெனில் வழிபாடு ராஜாவுக்குரியது அல்ல, தேவனுக்குரியது. எனவே, தேவனை சார்ந்த விடயங்களை தவிர, மற்ற விடயங்களில் நாங்கள் அதிகாரங்களுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும். ஒரு அதிகாரி, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, தனக்கும் தன் சந்ததிக்கும் நன்மை உண்டாக பொருள் சேர்ப்பவனாக இருந்தால், அதை அவன் தன் சந்ததியின் அழிவுக்கென்றே சேர்த்து வைக்கின்றான். அதே நேரத்திலே, அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான் அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். அதே போல, தேவனுடைய நியமத்திற்கு எதிரான கட்டளைகளை போடுகிறவனும், தனக்கு ஆக்கினை உண்டாகும்படி அப்படிச் செய்கின்றான். எனவே, தேவனுக்கு எதிர்த்து போடப்படும் கட்டளைகளுக்கு நாங்கள் உடன் பட்டவர்கள் அல்ல. மற்றும்படி, நாங்கள் தேசத்தின் சட்டத்திற்கு உடன்பட்டவர்களாக இருக்கின்றோம்.

**ரோமர் 13:1**

**எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன் ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, மேலாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு, கொடுக்க வேண்டிய கனத்தை கொடுத்து, கீழ்ப்படிந்திருக்க என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மேன்மையானதை நாடுவோம்

இந்த உலகிலே, தரமான வாழ்க்கை வாழ வேண்டும், நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என்று அநேகர் பிரயாசப்படுகின்றார்கள். நீதியாக செல்வத்தை பெருக்கினவர்களும், துன்மார்க்கத்தினால் செல்வப் பெருக்கை அடைந்தவர்களும், தங்களுக்கென பிரத்தியேகமான வைத்தியர்களை கூட, வேலைக்கு அமர்த்துகின்றார்கள். ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கு என்னத்தை உண்ண வேண்டும், எப்படி உடற்பயிற்சி செய்ய வேண்டும், எப்படி உறங்க வேண்டும் என்று பலர் கற்று அறிகின்றார்கள். நாம் உலகத்திலே ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று விரும்புவதில் தவறு ஏதும் இல்லை. ஆனால், இந்த மறுவாழ்வுக்குரிய காரியங்களைவிட இந்த உலகத்திற்குரிய காரியங்களை மேன்மைப்படுத்துவது மனிதர்களின் மதியீனம். மனிதன் எப்படிப்பட்ட கிரியைகளை செய்தாலும், ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை. மரணநாளின்மேலும் அவனுக்கு அதிகாரமில்லை. உலக தோற்றமுதல், தோன்றிய பல சக்கரவர்த்திகள், பெரும் அதிகாரிகள், தேவனுக்கு எதிராக எழுந்து நின்றவர்கள், தேவனுக்காக வாழ்ந்தவர்கள் எல்லோருமே இந்த பூமியைவிட்டு கடந்து சென்றுள்ளார்கள். இந்த பூமியிலே பிறப்பவர்கள் ஒரு நாள் மரிக்க வேண்டும். அதற்கு நல்லவன், கெட்டவன், பரிசுத்தன் என்ற பாகுபாடு இல்லை. இதனால் இந்த பூமியில் வாழும் நாட்களில், எல்லோருக்கும் அப்படியே சம்பவிக்கின்றது என சில மனிதர்கள் துணிகரம் கொண்டு, உல்லாசமாய் வாழ்ந்து நாட்களை கழிப்போம் என கண்போன போக்கில் வாழ்கின்றார்கள். ஆனால் தேவனுக்கு பயந்து, அவர் வழிகளிலே வாழ்ந்து, அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களின் ஆத்துமா, இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடலிலே நித்திய மரணத்தை ருசிபார்ப்பதில்லை. இவர்கள் நித்திய வாழ்வை சுதந்தரித்து கொள்வார்கள். ஆதலால் தான், நாங்கள் உயிர் வாழும் நாட்களில், எங்கள் மரணத்தோடு முடிவடையும் இவ்வுலகத்திற்குரிய காரியங்களை நாடித் தேடாமல், நித்திய வாழ்வு தரும் பரலோகத்திற்குரியவைகளையே நாடித் தேடுகின்றோம். பிரியமானவர்களே, கிறிஸ்துவுக்குள் உங்கள் நற்கிரியைகளில் நீங்கள் சோர்ந்து போகாமல், இன்னும் அதிகமாக செயற்படுங்கள்.

**எபிரெயர் 13:14**

**நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்.**

**ஜெபம்:** பரலோக பிதாவே, இனி வரப்போகும் மேன்மையை உணர்ந்து, கிறிஸ்துவுக்குள் இன்னும் அதிகமாக நற்கனிகளை கொடுக்கும் வாழ்க்கையை வாழ எனக்கு உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

**முகவரி ADDRESS:**

**(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)**

(தொலைபேசி இலக்கம், மின் அஞ்சல் முகவரி உங்களிடம் இருந்தால் அவைகளை குறிப்பிடவும்)

**தொலைபேசி TELEPHONE:**

**மின் அஞ்சல் E-MAIL:**

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

K. Indrajit
72/6 Edirisinghe Road,
Mirihana, Nugegoda

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca